www.penakural.com

மலர்: 03 இதழ்: 12 அக்டோபர் 2025 Vol.: 03 Issue: 12 October 2025 ₹ 20/-

# பேனா குரல்

# PENA KURAL

RNI No.: TNTAM / 2022 / 85375

தமிழ் மாத இதழ்




## கடைகளில் சுதேசி பொருட்கள்



## கேரளா சென்ற ஜனாதிபதி திரௌபதி முர்மு.. சபரிமலை கோயிலில் சாமி தரிசனம் செய்தார்!



## அச்சுறுத்தும் காலநிலை மாற்றம்: அதிர்ச்சியூட்டும் உண்மைகள்; சவால்கள்...


Subzero Cool Tech
AC REPAIR
SERVICE
&
RENT
AT YOUR DOOR STEP
AC REPAIR
INSTALLATION
MAINTENANCE
AMC SERVICE
We Repair all Brands
Uninstallation
Gas Filling
Air Duct Cleaning
HIGH QUALITY
PREMIUM
SERVICE
CONTACT US
Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil,
Chennai - 600097.
SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

பேனா குரல்
PENA KURAL தமிழ் மாத இதழ்
RNI No.: TNTAM/2022/85375
ஆண்டு: 03 இதழ்: 12 அக்டோபர் 2025
விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-



உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : N V சிவசங்கர்
ஆசிரியர் : ராதிகா.S, B.E.,
சிறப்பு ஆசிரியர் : M. ஸ்ரீராம்
கௌரவ ஆசிரியர் : K. ராமசுப்ரமணியன்
இணை ஆசிரியர் : K. ரமேஷ்குமார்

துணை ஆசிரியர்கள்:
துரை. சந்துரு, ந.மதிவாணன், P.கார்த்திகேயன், S.மோகன்

தலைமை நிருபர்கள்:
R.ஹரிகிருஷ்ணன், M.திலிப் குமார், B.நவின்குமார், H.காஞ்சன், சங்கரன்

நிருபர்கள்:
Ba.சரவணன், K.கலைமணி, அன்புமணி, தமிழ் வீரன், D.பாமா, D.ராஜேஷ், K.மாரிதுரை

புகைப்பட நிருபர்கள்: V.கவியரசன், கபில்
ஓவியம் & புகைப்பட நிருபர்: V.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்கள்:
M. குணசீலன், B.Com.,M.L., Government of India, Central Government Additional Standing Counsel
G. சத்தியநாராயணன், B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
Tamilni Printz & Graphics - 8754582123



நிர்வாக அலுவலகம்:
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 8754582123
info@penakural.com
news@penakural.com
www.penakural.com



பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, மற்றும் விளம்பரங்கள் இதழின் சொந்த கருத்து அல்ல. பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு உட்பட்டது. *




# சுற்றுச்சூழல் சேதமும் வனவிலங்கு வேட்டையும்

வனங்கள் மனித வாழ்வுக்கும் சுற்றுச்சூழலுக்கும் அடிப்படை நிலையாகும். இவை தண்ணீர் வளம், ஆகாயம் மற்றும் நிலத்தடி நீரை சீரமைத்து, பருவநிலை சமநிலையை பாதுகாக்கின்றன.

வனங்களில் வாழும் வனவிலங்குகள் சுற்றுச்சூழல் உணவுக்கட்டமைப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை வனங்களில் சரியான சமநிலையை உருவாக்கும் பங்காற்றுகின்றன.

சமீப காலங்களில் மனிதரின் அதிகரிக்கும் தேவைகள் மற்றும் லாப நோக்கத்தால் வனவிலங்கு வேட்டை ஒரு தீவிர பிரச்சனையாக மாறியுள்ளது.

வேட்டையாடுவதால் பல உயிரினங்கள் அழிந்து போகும் அபாயத்தில் இருக்கின்றன. குறிப்பாக புலிகள், யானைகள், காட்டுப்பன்றி, குரங்கு போன்ற விலங்குகள் எண்ணிக்கையில் குறைந்து வருகின்றன.

வனவிலங்கு வேட்டை சுற்றுச்சூழல் சேதத்தையும் அதிகரிக்கிறது. உணவுக்கட்டமைப்பு பாதிக்கப்பட்டு, வன அழிவு, மண் மாறுபாடு, நீர் வள குறைவு போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

**வேட்டையின் முக்கிய காரணங்கள்:** வணிகப் பயன்பாடு (கலைப்பொருட்கள், சிரிக்கோல்), சாப்பாடு, மரபு மருந்துகள் தயாரித்தல், சட்டம் மீறிய பொழுதுபோக்கு போன்றவை.

**தடுப்பு நடவடிக்கைகள்:** வன பாதுகாப்பு காவல்துறை கண்காணிப்பு, சட்ட நடவடிக்கைகள், கடுமையான தண்டனைகள், டிரோன் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் போன்ற தொழில்நுட்ப உபயோகம்.

பொதுமக்களின் விழிப்புணர்வு முக்கியம். பள்ளிகள், கல்லூரிகள், சமூக ஊடகங்கள் மூலம் வனவிலங்குகளின் முக்கியத்துவம் பற்றி அறிவுறுத்தல் செய்யப்பட வேண்டும்.

வனவிலங்கை பாதுகாப்பது மனித சமூகத்தின், சுற்றுச்சூழலின் மற்றும் எதிர்கால தலைமுறைகளின் நலனுக்காக அவசியம்.

அனைவரும் ஒன்றிணைந்து, வனவிலங்கு வேட்டை மற்றும் காடுகளுக்கு ஏற்படும் சேதத்தை தடுக்க முயல வேண்டும்; இது நமது பொறுப்பு மட்டுமல்ல, கடமையும் ஆகும்.

– **ஆசிரியர்**

# நாடகம் ஆடுறீங்களா...
# அய்யாவுக்கு ஏதாவது ஆச்சுனா தொலைச்சுடுவேன்: அன்புமணி காட்டம்



பாமக வில் தந்தை மகன் இடையே பனிப்போர் நிலவி வருகிறது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில் ராமதாஸ், அன்புமணி இருவரும் தனித்தனி டிராக்கில் பயணித்து வருவது அந்தக் கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. உடல்நலக்குறைவால் ராமதாஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அன்புமணிமருத்துவமனை சென்றும் அவரை சந்திக்க முடியவில்லை. இந்நிலையில் அய்யாவுக்கு ஏதாவது என்றால் தொலைத்து போடுவேன். நான் ரொம்ப கோபத்தில் இருக்கிறேன் என்று அன்புமணி ஆவேசமாக பேசியுள்ளார்

பாமகவில் நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி இடையே கருத்து வேறுபாடு, மோதல் உச்சத்தில் இருந்து வருகிறது. இதனால் பாமகவில் விரிசல் ஏற்பட்டு தனித்தனி அணியாக செயல்பட்டு வருகிறார்கள். தந்தை மகனான ராமதாஸ், அன்புமணி இருவரும் தனித்தனியாக பொதுக்குழு, மாநாடு, பொதுக்கூட்டம் நடத்தி வருகிறார்கள். அன்புமணி மீது நேரடியாக ராமதாஸ் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்தார்.

**மருத்துவனையிலும் பிரச்சனை**

இந்நிலையில் உடல்நலக்குறைவு காரணமாக ராமதாஸ், கடந்த 5 ஆம் தேதி சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் சந்தித்து நலம் விசாரித்தனர். மேலும் தமிழகத்தின் பல அரசியல் கட்சி தலைவர்கள் மருத்துவமனை சென்று ராமதாஸை நேரில் சந்தித்தனர்.

ராமதாஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுனே அன்புமணியும் அப்பலோ மருத்துவமனை சென்றார். ஆனால் ராமதாஸ் தீவிர சிகிச்சை பிரிவில் இருப்பதால், அவரை சந்திக்க முடியவில்லை என்று ராமதாஸ் கூறியிருந்தார். மற்ற தலைவர்கள் ராமதாஸை சந்தித்த நிலையில், அன்புமணியை வேண்டுமென்றே சந்திக்காமல் தவிர்த்துவிட்டதாக விமர்சனம் எழுந்தது. இது பாமகவில் நிலவும் பிரச்னையின் தொடர்ச்சியாகவே பார்க்கப்பட்டது.

இந்நிலையில் பனையூர் அலுவலகத்தில் பாமக நிர்வாகிகளிடம் பேசிய அன்புமணி, "அய்யா உடல்நலத்துடன் நன்றாக இருக்கிறார். மருத்துவமனை பரிசோதனைக்காக சென்றார்.இது முன்பே திட்டமிடப்பட்ட பரிசோதனை தான். ஒரு மாதத்திற்கு முன்பே சொல்லப்பட்டு, ஒரு வாரத்திற்கு முன்பு உறுதி செய்துவிட்டு போயுள்ளார். அங்கு அவரை பரிசோதனை செய்துவிட்டு நன்றாக இருக்கிறார் என கூறிவிட்டார்கள். பரிசோதனைக்கு சென்றதற்கெல்லாம் சிலர் அய்யாவுக்கு உடம்பு சரியில்லை வந்து பார் என்கிறார்கள்.


அய்யாவுக்கு கழிப்பறையில் கூட போன் வருகிறது. என்னய்யா பண்ணிட்டு இருக்கீங்க அய்யாவை வெச்சுட்டு. அய்யாவுக்கு ஏதாவது ஆச்சு என்றால் தொலைச்சு போடுவேன். சும்மா இருக்க மாட்டேன். என்ன.. வேடிக்கை பார்க்கறேன் என நினைச்சுட்டு இருக்காங்க. மனசுல அவ்வளவு கோபம் இருக்கும். அய்யாவை வெச்சு டிராமா பண்ணி நாடகம் ஆடிட்டு இருக்காங்க. துப்பு இல்லாதவர்கள்." என்று கோபமாக பேசினார்.

# கேரளா சென்ற ஜனாதிபதி திரௌபதி முர்மு.. சபரிமலை கோயிலில் சாமி தரிசனம் செய்தார்!

இந்தியக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக கேரளா மாநிலத்துக்கு சென்றுள்ளார். 21.10.2025 அன்று மாலை திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையத்தை அவர் அடைந்தபோது, கேரளா மாநில ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் மற்றும் முதல்வர் பினராயி விஜயன் ஆகியோர் அவரை வரவேற்றனர். அங்கிருந்து அவர் கவர்னர் மாளிகைக்கு சென்று ஓய்வு பெற்றார். 22.10.2025 அன்று காலை 9.35 மணிக்கு திருவனந்தபுரத்திலிருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்ட குடியரசுத் தலைவர் முர்மு, காலை 10.20 மணிக்கு நிலக்கல் ஹெலிபேடில் இறங்கினார். அங்கிருந்து சிறப்பு வாகனத்தில் சாலை மார்க்கமாக சபரிமலை சன்னிதானத்தை அடைந்தார்.

பின்னர் இருமுடி கட்டியபடி சபரிமலை கோயிலின் 18-ம் படியை ஏறி, ஐயப்பனை தரிசித்தார். இதன் மூலம் குடியரசுத் தலைவர் பதவியில் இருக்கும் ஒருவர் சபரிமலைக்கு தரிசனம் செய்வது இதுவே முதல்முறை என்ற சிறப்பு நிகழ்வாகும். ஜனாதிபதி முர்முவுக்கு ஐயப்பன் கோயில் சார்பில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. அவருடன் சென்ற மெய்க்காவலர் குழுவினரும் இருமுடி கட்டியபடி தரிசனத்தில் பங்கேற்றனர். தரிசனத்தை முடித்த பின்னர் அவர் இரவே திருவனந்தபுரம் திரும்பி, அங்கு ஆளுநர் அர்லேகர் ஏற்பாடு செய்துள்ள இரவு விருந்தில் பங்கேற்றார்.

குடியரசுத் தலைவர் வருகையையொட்டி சபரிமலையில் கடும் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. இரண்டு நாள்கள் பக்தர்கள் இரவு தங்க அனுமதி மறுக்கப்பட்டது. மேலும், ஜனாதிபதி நிலக்கல்லில் இருந்து புறப்பட்ட பிறகு பொதுமக்களுக்கு தரிசனம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. 22.10.2025 அன்று மாலை முதல் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவர். துலாம் மாதப் பூஜைகள் நிறைவடைவதையொட்டி இன்றிரவு 10 மணிக்கு கோயில் நடை சாத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# அச்சுறுத்தும் காலநிலை மாற்றம்: அதிர்ச்சியூட்டும் உண்மைகள்; சவால்கள்...

## தடுத்து நிறுத்த முடியுமா?



காலநிலை மாற்றம், (Climate change) நம் காலத்தின் வரையறுக்கும் பிரச்சனை, ஆழமான வழிகளில் உலகை மறுவடிவமைத்துக்கொண்டே இருக்கிறது. பூமியானது வெப்பநிலை, கடல் மட்டங்கள் மற்றும் வானிலை முறைகளில் முன்னோடி-யில்லாத மாற்றங்களுக்கு உள்ளாகும்போது, காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் பெருகிய முறையில் வெளிப்படுகின்றன, இது அவசர மற்றும் கூட்டு நடவடிக்கைக்கான உலகளாவிய அழைப்பைத் தூண்டுகிறது.

**உயரும் வெப்பநிலை மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகள்:**

காலநிலை மாற்றத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க வெளிப்பாடுகளில் ஒன்று உலக வெப்பநிலையின் அதிகரிப்பு ஆகும். பூமியின் சராசரி வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது அடிக்கடி மற்றும் கடுமையான வெப்ப அலைகளுக்கு வழிவகுக்கிறது. இதனுடன், சூறாவளி, வெள்ளம் மற்றும் காட்டுத்தீ போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள் மிகவும் பரவலாகி,

பரவலான பேரழிவை ஏற்படுத்துகின்றன மற்றும் சமூகங்களை இடம்பெயர்க்கின்றன.

**உருகும் பனி மற்றும் உயரும் கடல் மட்டங்கள்:**

வெப்பமயமாதல் காலநிலை துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் மற்றும் பனிக்கட்டிகள் உருகுவதை துரிதப்படுத்தியுள்ளது.

கடல் மட்டத்தை உயர்த்துவதற்கு பங்களிக்கிறது. கடலோர பகுதிகள் மற்றும் தாழ்வான தீவு நாடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இதன் விளைவுகள் சுற்றுச்சூழலுக்கு மட்டுமல்ல, சமூக-பொருளாதாரமாகவும், கடலோர சுற்றுச்சூழல் அமைப்புகளை தங்கள் வாழ்வாதாரத்திற்காக நம்பியிருக்கும் சமூகங்களை பாதிக்கிறது.

**பல்லுயிர் இழப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்குலைவு:**

காலநிலை மாற்றம் (Climate change) பல்லுயிர் இழப்பை அதிகப்படுத்துகிறது. உலகெங்கிலும் உள்ள சுற்றுச்சூழல் அமைப்புகளை அச்சுறுத்துகிறது. வெப்பநிலை மற்றும் மழைப்பொழிவு முறைகளில் ஏற்படும் மாற்றங்கள், வாழ்விட அழிவுடன் இணைந்து, இயற்கை சமநிலையை சீர்குலைத்து, இனங்கள் அழிவுக்கு வழிவகுக்கும் மற்றும் முக்கியமான சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை இழக்கின்றன. இது வனவிலங்குகளை மட்டுமல்ல, உணவு, நீர் மற்றும் பிற வளங்களுக்கான ஆரோக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளைச் சார்ந்துள்ள மனித சமூகங்களையும் பாதிக்கிறது.

**பெருங்கடல் அமிலமயமாக்கல் மற்றும் பவளப்பாறை சரிவு:**

உலகப் பெருங்கடல்கள், காலநிலையின் முக்கியமான கட்டுப்பாட்டாளராகச் செயல்படுகின்றன; குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றன. அதிகரித்த கார்பன்-டை-ஆக்சைடு வெளியேற்றம் கடல் அமிலமயமாக்கலை ஏற்படுத்துகிறது. பவளப்பாறைகள் போன்ற கடல் வாழ் உயிரினங்களை பாதிக்கிறது. பவள வெளுப்பு, வெப்பமான கடல் வெப்பநிலையின் விளைவாக, இந்த மாறுபட்ட சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது, கடல் வளங்களைச் சார்ந்திருக்கும் சமூகங்களின் வாழ்வாதாரத்தை சமரசம் செய்கிறது.

**உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் தணிப்பு முயற்சிகள்:**

காலநிலை மாற்றத்தின் சிக்கலான சவால்களை எதிர்கொள்வதற்கு ஒருங்கிணைந்த உலகளாவிய முயற்சி தேவைப்படுகிறது.

பாரிஸ் உடன்படிக்கை போன்ற சர்வதேச ஒப்பந்தங்கள், உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கும், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு ஏற்ப மாற்றுவதற்கும் நாடுகளை ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இருப்பினும், சவால்கள் தொடர்கின்றன. மேலும் இந்த ஒப்பந்தங்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய அதிக லட்சிய நடவடிக்கைகள் தேவை.

**புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் நிலையான நடைமுறைகள்:**

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களுக்கு மாறுதல் மற்றும் நிலையான நடைமுறைகளைப் பின்பற்றுதல் ஆகியவை காலநிலை மாற்றத்தைத் (Climate change) தணிக்க ஒருங்கிணைந்ததாகும். சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரம் போன்ற தூய்மையான ஆற்றல் மாற்றுகளுக்கான உலகளாவிய உந்துதல் வேகத்தை அதிகரித்து வருகிறது. கூடுதலாக, நிலையான விவசாயம், காடுகளை வளர்ப்பது மற்றும் புதுமையான தொழில்நுட்பங்கள் கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதிலும், காலநிலை-எதிர்ப்பு சமூகங்களை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

# செமிகண்டக்டர் உற்பத்தியில் இந்தியா!
# கலக்கப்போகும் தமிழ்நாடு!

தினத்தந்தி குழுமத்தின் ஒரு அங்கமான தந்தி டிவியின், பாட்காஸ்ட் நிகழ்ச்சி மக்களிடையே மிகவும் பிரபலமாக உள்ளது.


அதில் சமீபத்தில் வெளியான நிகழ்ச்சியில் செமிகண்டக்டர் பற்றி சாமானிய மனிதனும் புரிந்து கொள்ளும் வகையில் மிக தெள்ளத் தெளிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. செமிகண்டக்டர் என்றால் என்ன? அதன் பயன்பாடு என்ன? எதிர்காலத்தில் அது வழங்கப்போகும் வேலை வாய்ப்புகள் என்ன? என்பது குறித்து ஒரு பாடமே நடத்தப்பட்டது.

அந்த நிகழ்ச்சியை பார்த்தவர்களுக்கு, செமிகண்டக்டர் பற்றி ஒரு நல்ல புரிதல் ஏற்பட்டு விட்டது. இந்த உலகமே சிப் என்ற ஒரு சிறிய விஷயத்தில்தான் இயங்கிக்கொண்டு இருக்கிறது. செல்போன், லேப்-டாப், வாஷிங் மெஷின், கார், விமானம், ஏன் ரோபோ முதற்கொண்டு அனைத்து தகவல் தொழில் நுட்ப மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பொருட்களும் இந்த சின்னஞ்சிறிய அளவிலான சிப் மூலம் தான் இயங்குகிறது இந்த சிப் தயாரிக்க வேண்டுமென்றால் அதற்கு செமிகண்டக்டர்தான் தேவை.

அதாவது செமி கண்டக்டர் என்பது அரிசி மாதிரி, சிப் என்பது சோறு போன்றது, சோறு சமைக்க அரிசி எப்படி தேவையோ? அதுபோல சிப் தயாரிக்க செமி கண்டக்டர் அத்தியாவசியமாகும். அந்த வகையில் எளிய விளக்கம் தந்தி டிவியில் ஒளிபரப்பப்பட்ட பாட்காஸ்டில் கூறப்பட்டது. இந்த சிப்-களைப் பொறுத்த மட்டில் இப்போதும் இந்தியா வெளிநாடுகளின் இறக்குமதியை நம்பித்தான் இருக்கிறது.

இந்நிலையில் சுயசார்பு என்ற தாரக மந்திரத்தின் கீழ் “இந்தியாவில் தயாரிப்போம், உலகுக்காக வழங்குவோம்” என்ற முழக்கத்துடன் வெளிநாடுகளை எதற்கும் சார்ந்து இல்லாமல் அனைத்து பொருட்களையும் இந்தியாவிலேயே தயாரிக்கவேண்டும் என்ற முனைப்பில் செயல்படும் நடவடிக்கையில் இப்போது செமிகண்டக்டர் ஒரு முக்கிய பங்கு வகிக்கப்போகிறது.

மேலும் சமீபத்தில் டெல்லியில் “செமிகான் இந்தியா -2025” என்ற சர்வதேச கருத்தரங்கு 3 நாட்கள் நடந்தது. இந்நிகழ்ச்சியில் இஸ்ரோவின் விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் மற்றும்



செமி கண்டக்டர் ஆய்வகம் ஆகியவை இணைந்து உருவாக்கிய செமிகண்டக்டர் சிப் ஆன விக்ரம்-32 பார்வைக்கு வைக்கப்பட்டது, இதன் மூலம் இந்தியாவில் கொடி கட்டிப்பறக்க போகும் சிப் உற்பத்திக்கு இது ஒரு தொடக்கமாக அமைந்துள்ளது.

ஏனெனில் இனி இந்தியா விண்ணில் செலுத்தப்போகும் செயற்கைகோள்களில் எல்லாம் இந்த விக்ரம்-32 சிப் பெரும் பணியாற்றும். அதேபோல், இந்தியாவில் சிப் தயாரிக்க ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்ட கெய்ன்ஸ் செமிகான் நிறுவனம் தனது சிப்-ஐ அடுத்த மாதம் வெளியிடுகிறது. ஆக அடுத்தடுத்து பல நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை பெருக்கி, சிப்-களை வெள்ளம் போல மார்க்கெட்டுக்கு கொண்டு வர வேகம் எடுத்துவிட்டன.

எனவே செமிகண்டக்டர் உற்பத்தியை ஊக்குவிக்க ஒன்றிய அரசு ரூபாய் 76 ஆயிரம் கோடி ஊக்குவிப்பு தொகுப்பு திட்டத்தை செயல்படுத்துகிறது. இந்த செமிகண்டக்டர் தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருளான சிலிக்கான் மற்றும் குவார்ட்ஸ் மணல் தமிழ்நாட்டிலும் கிடைக்கிறது. ஆகையால் இதை பயன்படுத்தி தமிழ்நாட்டிலும் செமிகண்டக்டர் தயாரிப்பதற்காக தமிழக அரசு சென்னை மற்றும் கோவையில் உற்பத்தி பூங்காக்களை தொடங்க அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

எனவே மிக விரைவில் தமிழ்நாட்டிலும் செமிகண்டக்டர் உற்பத்தியில் பெரிய புரட்சி நடக்கப்போகிறது. இதன்மூலம் தயாரிக்கப்படும் சிப்-கள் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்ல வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட இருக்கிறது மகிழ்ச்சி தரும் விஷயமாக கருதப்படுகிறது

# தரமற்ற 3 இருமல் மருந்துகளை தவிர்க்கவும்; உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை




இந்தியாவில் தயாரிக்கப்படும், 'கோல்ட்ரிப்' உள்ளிட்ட மூன்று வாய்வழி இருமல் மருந்துகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ள நிலையில், தங்கள் நாடுகளில் இந்த மருந்துகள் புழக்கத்தில் இருந்தால் அதை பயன்படுத்த வேண்டாம் என, உலக சுகாதார நிறுவனம் கேட்டு கொண்டுள்ளது.

தமிழகத்தின் காஞ்சிபுரத்தில் தயாரிக்கப்பட்ட, 'கோல்ட்ரிப்' இருமல் மருந்தை குடித்த மத்திய பிரதேசத்தை சேர்ந்த 5 வயதுக்கு உட்பட்ட 22 குழந்தைகள், சமீபத்தில் கிட்னி பாதிப்பால் இறந்தனர். இது தவிர ராஜஸ்தானிலும் இருமல் மருந்து குடித்த நான்கு குழந்தைகள் இறந்தனர்.

குழந்தைகள் உயிரிழப்புக்கு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட, 'கோல்ட்ரிப், ரெஸ்பி பிரஷ் டிஆர்' மற்றும் 'ரீ லைப்' ஆகிய மூன்று வாய்வழி இருமல் மருந்துகளே காரணம் எனவும், தரமற்ற இந்த மருந்துகளை குடித்ததால் குழந்தைகள் உயிரிழந்ததும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் உலக சுகாதார நிறுவனம், உலகில் உள்ள தேசிய ஒழுங்குமுறை அமைப்பு அதிகாரிகளுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தரமற்ற இருமல் மருந்துகளான, 'கோல்ட்ரிப், ரெஸ்பி பிரஷ் டிஆர்' மற்றும் 'ரீ லைப்' ஆகியவை உங்கள் நாடுகளில் இருந்தால் அதுகுறித்து சுகாதார அதிகாரிகள் தகவல் தெரிவிக்க வேண்டும். தரமற்ற இந்த தயாரிப்புகள் முறைசாரா மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத சந்தைகளில் இருக்கிறதா என்பதை தீவிரமாக கண்காணித்து தடுக்க வேண்டும்.


இந்த மூன்று வாய்வழி இருமல் மருந்துகளிலும், 'டை எத்திலீன் கிளைக்கால்' என்ற தரமற்ற பொருள் இருப்பதை இந்தியாவில் உள்ள மத்திய தரக்கட்டுபாட்டு அமைப்பு கடந்த 8ல் உறுதி செய்துள்ளது.

இதையடுத்து அதன் உற்பத்தி முடக்கப்பட்டுள்ளதுடன், மருந்துக்கான அங்கீகாரமும் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது. இந்த மருந்துகள் இந்தியாவில் இருந்து இப்போது ஏற்றுமதி செய்யப்படவில்லை என்பதுடன், சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்வது குறித்த தகவல் எதுவும் இல்லை.

இதையும் மீறி, இந்த மருந்துகள் உங்களிடம் இருந்தால் அதை பயன்படுத்த வேண்டாம். ஒருவேளை பயன்படுத்தியிருந்தால் அந்த குழந்தைகளை விஷமுறிவு டாக்டரிடம் காண்பித்து சிகிச்சை பெற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆணவப் படுகொலையை தடுக்க ஆணையம்!

# ஸ்டாலின் அறிவிப்பு!



சட்டப்பேரவை விவாதத்தில் உறுப்பினர்கள் சிலரின் ஆணவப் படுகொலை குறித்த கேள்வி தொடர்பாக முதல்வர் கூறியதாவது:-

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அறநெறியை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன வான்புகழ் வள்ளுவர் பிறந்த மண் இந்த தமிழ் மண். மேலும் சாதி இரண்டொழிய வேறில்லை, இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் என்கிறார் அவ்வையார்.

எனவே இதுதான் தமிழ்த்தம் நெறி, தமிழர் போற்றி வந்த பண்பாடு இருப்பினும் இடைக்காலத்தில் புகுந்தவர்களால் தொழில் வேற்றுமையானது, சாதி வேற்றுமையாக மாற்றப்பட்டது, உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டது, மேல் கீழ் என்ற வேற்றுமை விதைக்கப்பட்டது. வேற்றுமை விதைக்கப்பட்ட உடனேயே, ஒற்றுமைக்கான குரல்களும் தமிழ் மண்ணில் உரக்க ஒலித்ததைக் காண்கிறோம்.

மேலும் பல சீர்திருத்தக் கருத்துக்கள் இயக்கமாகவே உருவெடுத்துள்ளன. அயோத்திதாச பண்டிதர், பெரியார், திருவிக, பாரதிதாசன், அண்ணா ஆகியோர் இந்த சீர்திருத்தக் கருத்துக்களை இந்த தமிழ் மண்ணில் விதைத்தார்கள். எனவே கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரம் பொருந்திய பதிவிகள், அனைவருக்கும் சம அதிகாரம், சம வாய்ப்பு ஆகியவற்றை பெறுவதின் மூலம் யாவரும் ஒருவரே என்பதை உருவாக்கவே இந்த இயக்கங்கள் போராடின, வாதாடின, மன மாற்றங்களைச் செய்தன.

**"இந்த ஆணையம் அரசியல் இயக்கங்கள், சட்ட வல்லுநர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களையும் பெற்று இப்பொருள் குறித்து உரிய பரிந்துரைகளை வழங்கும். அதன் அடிப்படையில் தமிழக அரசு ஆணவப் படுகொலையை தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்."**

மேலும் சாதிக்கு மதத்துக்கு தரப்பட்ட முக்கியத்துவத்தை தமிழ் மொழிக்கு, இனத்துக்கு தரும் சிந்தனையை திராவிட இயக்கம், தனித்தமிழ் இயக்கங்கள் விதைத்தன. இனமும் மொழியும் நமது அடையாளங்களாக மாற்றியது இதன் சாதனைகள். சீர்திருத்தக் கருத்துக்களை பரப்புரை செய்துவந்த அதே காலகட்டத்தில் அதற்கான சட்டங்களையும் திட்டங்களையும் கொண்டு வந்து சமூக சீர்திருத்த ஆட்சியை கருணாநிதி நடத்தினார்.

அந்த வழித்தடத்தில் திராவிட மாடல் ஆட்சியை நாங்கள் நெஞ்சு நிமிர்த்தி நடத்தி வருகிறோம். அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கியிருக்கிறோம், பெரியார் பிறந்த நாளிலும் அம்பேத்கர் பிறந்த நாளிலும் இந்த நாடே உறுதிமொழி எடுக்கிறது. ஆகையால் இவர்கள் பிறந்த நாளில் அனைவரும் சமூக நீதி, சம நீதி உறுதிமொழி எடுப்பது சாமானியமான சாதனை அல்ல. தமிழ்நாடு சட்டப்பேரவை இதே அவையில் 29.04.2025 அன்று உரையாற்றியபோது ஆதிக்கத்தின் அடையாளமாகவும் தீண்டாமையின் குறியீடாகவும் வகைச் சொல்லாகவும் இருக்கக்கூடிய காலனி என்ற சொல்லை நீக்குவோம் என நான் அறிவித்தேன். மேலும் பள்ளி, கல்லூரி விடுதிகளில் சாதி அடையாளங்கள் இருக்கக்கூடாது என்பதற்காக அவற்றை சமூக நீதி விடுதிகளாக பெயர் மாற்றி இருக்கிறோம்.

அதன் தொடர்ச்சியாக பிரதமர் மோடியை சமீபத்தில் சந்தித்து முக்கியமான ஒரு கோரிக்கையை நான் வைத்தேன். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் உள்ள சாதி பெயரில் இறுதி எழுத்தில் முடிவடையும் ன் என்பதற்குப் பதில் ர் என விகுதி மாற்றம் செய்து அந்த சமூக மக்களுக்கு உரிய மரியாதை செய்யும் வண்ணம் ஒன்றிய அரசு உரிய சட்டம் இயற்ற விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த கோரிக்கை.



மேலும் சமூக நீதி, சமத்துவம், சகோதரத்துவம், பொதுவுடமை, பொது உரிமை, கல்வி உரிமை, அதிகார உரிமை ஆகிய கொள்கைகள்தான் வேற்றுமையை பகைமையை விரட்டும். அதனைத்தான் நாங்கள் செய்து வருகிறோம். இதன்மூலமாகத்தான் சமத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க முடியும்.

இத்தகைய சூழலில் நாட்டில் நடைபெறும் சில சம்பவங்கள் நமது மனதை வேதனை அடைய வைத்துள்ளன. இதற்காகவா நமது தலைவர்கள் போராடினார்கள்? நாம் போராடி வருகிறோம் என்ற வேதனை ஏற்படுகிறது. உலகம் அறிவுமயமாகி வருகிறது.

ஆனால், அன்புமயமாவதை அது தடுக்கிறது என்பதுதான் இந்த சீர்திருத்த எண்ணம் கொண்டவர்களை வாட்டி வருகிறது. உலகம் முழுவதும் பரவி அறிவினால் மதிக்கப்பட்டு வரும் நம் தமிழ் சமுதாயம், உள்ளூரில் சண்டை போட்டுக் கொள்வது என்ன நியாயம் என்பதுதான் நம்மை வருத்தும் கேள்வியாக உள்ளது.

எனவே எதற்காகவும் ஒருவரை மற்றொருவர் கொல்வதை நாகரீக சமுதாயத்தால் ஏற்க முடியாது. கொல்வதை மட்டுமல்ல, பகைப்பதை, சண்டை போட்டுக்கொள்வதை, அவமானப்படுவதை என எதையும் பண்பட்ட வளர்ச்சி பெற்ற ஒரு சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும் சமீபத்தில் செங்கல்பட்டில் நடைபெற்ற திராவிடர் கழக சுயமரியாதை மாநாட்டில் திராவிடர் கழக தலைவர் வீரமணி, தீர்மானமாக நிறைவேற்றி என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தி அதன்மூலம் இந்த அநீதியை தடுக்க வேண்டும் என்பது நம் அனைவரது ஆதங்கமாக இருக்கிறது.

மேலும் ஆணவப் படுகொலைகள் நடக்கும்போது அது தொடர்பான வழக்குகளில் கடுமையான பிரிவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இப்படுகொலைகளுக்கு சாதி மட்டுமே காரணம் அல்ல, இன்னும் பல காரணங்களும் இருக்கின்றன. ஆகையால் எதன்பொருட்டு நடந்தாலும் கொலை கொலைதான் அதற்கான தண்டனைகள் கடுமையாக தரப்பட்ட வருகின்றன.

மேலும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கிறாரகள் எனவே யாரும் எவரும் எதன்பொருட்டும் செய்த குற்றத்தில் இருந்து தண்டனையில்லாமல் தப்பிவிடக்கூடாது என்பதை காவல்துறைக்கு உத்தரவாக போட்டுள்ளோம்.

எனவே, சட்டம் தனது கடமையை செய்கிறது. அதேநேரத்தில் இக்கொடூரமான சிந்தனைக்கு எதிரான விழிப்புணர்வை சமூக சீர்திருத்த இயக்கங்கள் மட்டுமல்ல அரசியல் இயக்கங்களும் பொதுநல அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும் என்பதை எனது வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். மேலும் நாகரிக சமூகத்தின் அடையாளம் என்பது பொருளாதார மேம்பாடு மட்டுமல்ல, சமூக சிந்தனையில் மேம்பாடு என்பதை உணர்த்துவதாக இப்பரப்புரைகள் இருக்க வேண்டும், சமுதாயத்தில் சாதி வேற்றுமைக்கு எதிராக, ஆதிக்க மனப்பான்மைக்கு எதிராக அனைவரும் பேச வேண்டும். மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வுகள் ஏதும் இல்லை அனைவரும் சமம், பாலின சமத்துவமும் வளர்ச்சி பெற்ற ஒரு சமுதாயத்துக்கு அடையாளம் என்றார் பெரியார்.

எனவே அனைத்து விதமான ஆதிக்க மனப்பான்மைக்கும் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். ஆதிக்க எதிர்ப்பும் சமத்துவ சிந்தனையும் கொண்ட சுயமரியாதையையும் அன்பும் சூழ்ந்த மானுடத்தை உருவாக்குவதற்கான பரப்புரையை ஒரு இயக்கமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டியது நம் அனைவரின் கடமை. மேலும் சீர்திருத்தப் பரப்புரையும் குற்றத்துக்கான தண்டனையும் வாளும் கேடயமுமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இது குறித்து தேவையான பரிந்துரைகளை அளிப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.என் பாஷா தலைமையில் சட்ட வல்லுநர்கள் முற்போக்கு சிந்தனையாளர்கள் மானுடவியல் அறிஞர்களைக் கொண்ட ஒரு ஆணையம் அமைக்கப்படும் என்பதை என்னுடைய முக்கியமான அறிவிப்பாக இந்த மாமன்றத்தில் அறிவிக்கிறேன்.

மேலும் இந்த ஆணையம் அரசியல் இயக்கங்கள், சட்ட வல்லுநர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களையும் பெற்று இப்பொருள் குறித்து உரிய பரிந்துரைகளை வழங்கும். அதன் அடிப்படையில் தமிழக அரசு ஆணவப் படுகொலையை தடுக்கும் நோக்கில் உரிய சட்டம் இயற்ற தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று உறுதி அளித்து சட்டமன்றத்தில் உரையாற்றினார்.

# கருத்துச் சுதந்திரம் என்பது குடிமகனின் ஆயுதம்

அவதூறு வழக்கு குறித்தான விவாதம் மீண்டும் எழுந்திருக்கிறது. தனிமனிதருக்கோ, நிறுவனத்துக்கோ, அமைப்புக்கோ களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், மரியாதையைக் குறைக்கும் வகையிலும் தரம் தாழ்ந்த விதத்தில் சொல்லப்படும் கருத்துகளுக்கு எதிராகத் தொடரப்படுபவைதான் அவதூறு வழக்குகள். மானநஷ்ட வழக்கு என்று பரவலாகப் பேசப்படும் அவதூறு வழக்கு சமூக ஊடகங்களின் வருகைக்குப் பிறகு அதிகரித்திருக்கிறது.

பொதுவெளியில் தனிநபர், நிறுவனம் அல்லது அமைப்புக்கு எதிராகப் பேசுவதையோ, பதிவு செய்வதையோ, கிரிமினல் குற்றமாகக் கருத வேண்டுமா என்கிற கேள்வியை மீண்டும் கேட்டு இருக்கிறது உச்சநீதிமன்றத்தின் நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் தலைமையிலான அமர்வு. நற்பெயருக்கு களங்கம் உண்டாக்குவதை கிரிமினல் குற்றமாகக் கருதுவதை 2016-இல் உச்சநீதிமன்றம் அங்கீகரித்து தீர்ப்பு வழங்கியிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

‘த வயர்’ என்கிற இணையதளம் தங்களுக்கு எதிரான அவதூறு வழக்கில் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு விசாரணையின்போது, ‘கௌரவத்துக்கும் நன்மதிப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் கருத்துகளை கிரிமினல் குற்றமாகக் கருதுவதை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய காலம் வந்து விட்டது’ என்பது நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் தெரிவித்த கருத்து. மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கும்போது தனது கருத்தை பிரதிபலிக்கும் விதத்தில்,




கிரிமினல் பிரிவில் அவதூறு வராது என்று நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் அமர்வால் தீர்ப்பு எழுதிவிட முடியாது. ஏற்கெனவே 2016-இல் இரண்டு நீதிபதிகள் அமர்வு கிரிமினல் குற்றத்தை உறுதி செய்திருக்கும் நிலையில், இன்னொரு இரண்டு நீதிபதிகள் அமர்வால் அதைத் திருத்தி எழுத முடியாது. வேண்டுமானால், கூடுதல் நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு இந்தப் பிரச்னையை விசாரித்துத் தீர்ப்பு வழங்க தலைமை நீதிபதிக்குப் பரிந்துரை செய்யலாம்.

இழப்பீடு கோரும் குடிமையியல் (சிவில்) வழக்காகவும், தண்டனை வழங்கக் கோரும் குற்றவியல் (கிரிமினல்) வழக்காகவும் இரண்டு வகையாக அவதூறுக்கு எதிரான வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. கிரிமினல் அவதூறு வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவருக்கு இரண்டு ஆண்டுகள்வரை தண்டனை வழங்க முடியும்.

பாரதிய நியாய சன்ஹிதா (பி.என்.எஸ்.) 356-ஆம் பிரிவின்கீழ் கிரிமினல் அவதூறு



வருகிறது. முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கு பொருத்தமில்லாத அதிக அளவிலான தண்டனை 356-ஆவது பிரிவின் கீழ் வழங்கப்படுகிறது என்பது சட்ட வல்லுநர்களும், அரசியல்வாதிகளும் சுட்டிக்காட்டும் குறைபாடு.

சிவில் அவதூறு வழக்குகளில் முன்வைத்த கருத்துகளுக்கான ஆதாரங்களை நிரூபித்தால், நடவடிக்கைகளில் இருந்து தப்ப முடியும்; குற்றச்சாட்டை நிராகரிக்கவும் முடியும். ஆனால், கிரிமினல் அவதூறு வழக்குகள் அப்படிப்பட்டவை அல்ல.

வழக்குக்கு ஆதாரமான குற்றச்சாட்டுகள் உண்மையானவை என்பதை சாட்சியங்களுடன் நிரூபித்தாலும்கூட, பொது நன்மைக்காக சொல்லப்பட்டவை அல்லது வெளியிடப்பட்டவை என்பதையும் நிரூபித்தால் மட்டுமே தண்டனையிலிருந்து தப்ப முடியும். குற்றவாளியைத் தண்டிப்பதா, அவ்வாறு தண்டிப்பதாக இருந்தால் தண்டனைக் காலம் என்ன என்பதை நீதிமன்றத்தின் முடிவுக்கு விட்டுவிடுகிறது சட்டப் பிரிவு 356.

அவதூறு என்பது தனிப்பட்ட பாதிப்பு மட்டுமல்லாமல், சமூக அமைதிக்கும் பாதிப்பாகும்போது தண்டனை அவசியம் என்று முந்தைய தீர்ப்பில் நீதிமன்றம் விளக்கம் அளித்திருந்தது. கௌரவம் அல்லது நற்பெயர் என்பது அரசியல் சாசனப் பிரிவு 21 உத்தரவாதம் அளித்திருக்கும் ஜீவாதார உரிமையின் வரம்பின்கீழ் வரும் என்று 2016 உச்சநீதிமன்றத் தீர்ப்பு கூறுகிறது. நீதிபதிகள் தீபக் மிஸ்ராவும், பி.சி.பந்த் அடங்கிய அமர்வு கிரிமினல் குற்றமாக அவதூறைக் கருதலாம் என்று 2016-இல் தெரிவித்திருக்கிறது.

அவதூறை கிரிமினல் குற்றமாகக் கருதுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள், அது அரசியல் சாசனப் பிரிவு 19 (1) (அ) வழங்கும் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரானது என்று சுட்டிக்காட்டுகிறார்கள். கருத்துச் சுதந்திரத்துக்கு உரிமை என்பது வரம்பில்லாதது அல்ல என்றும், சட்டப் பிரிவு 21 வழங்கும் ஒருவருடைய கௌரவத்துக்கான உரிமைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இருந்தாக வேண்டும் என்பது 2016 உச்சநீதிமன்றத் தீர்ப்பு.

இரண்டு சட்டப் பிரிவுகளையும் இணைத்துப் பார்க்க வேண்டியது அவசியமா என்கிற கேள்வியை கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்துபவர்கள் எழுப்புகிறார்கள். இந்தப் பிரச்னை உச்சநீதிமன்ற விரிவான அமர்வின் பரிசீலனைக்கு வருமேயானால், நீதிபதிகள் தெளிவை உண்டாக்க முடியும். இந்தியா விடுதலை பெற்றதுமுதல் விசாரணை நீதிமன்றங்களிலும் உயர்நீதிமன்றங்களிலும், உச்சநீதிமன்றத்திலும் இதுவரை ஆயிரக்கணக்கான வழக்குகள் கருத்துச் சுதந்திரம் குறித்தும், அவதூறு குறித்தும் விவாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், உச்சநீதிமன்றம் விரிவான அமர்வின் பரிசீலனைக்கு அதை உட்படுத்தப்படுவது நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் தெரிவித்திருப்பதுபோல காலத்தின்கட்டாயம்.

அதிகாரம் உள்ளவர்களும் செல்வாக்கு மிக்கவர்களும் தங்களுக்கு எதிரான விமர்சனங்களுக்கு வாய்ப்பூட்டு போடவும், எதிரானவர்களை அச்சுறுத்துவதற்கும் அவதூறு வழக்கை தவறாகப் பயன்படுத்துவது புதிதல்ல. கருத்துச் சுதந்திரம் என்பது குடிமகனின் ஆயுதம். மக்களாட்சியின் அடிப்படையே விமர்சனம்தான். அதே நேரத்தில் தரம் குறைந்த விமர்சனங்கள், ஆதாரமற்ற அவதூறுகளை கருத்துச் சுதந்திரம் என்கிற போர்வையில் அனுமதிப்பதும் ஜனநாயகம் ஆகாது.

# தமிழ்நாட்டில் உள்ள உட்கட்டமைப்புகளில் சாதி பெயர்களை நீக்க அரசு உத்தரவு!

குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள் போன்ற பொது உட்கட்டமைப்புகளில் உள்ள சாதி சார்ந்த பெயர்களை நீக்க தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அக்.8 அன்று வெளி-யிட்டுள்ள அரசாணையில், ''முதலமைச்சர் சட்டப்பேரவையில் ஏப்ரல் 29, 2025 அன்று அறிவித்தபடி, காலனி என்ற சொல்லை அரசின் ஆவணங்களிலும் பொதுப் பயன்பாட்டிலிருந்தும் நீக்கும் நடவடிக்கையுடன், சமூகத்தில் பாகுபாடுகளை ஒழிக்கும் முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டங்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு வழிகாட்டு நெறிமுறைகளை வெளி-யிட்டுள்ளது. இதன்படி, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், தங்களது எல்லைக்குள் உள்ள சாதிப்பெயர்கள் கொண்ட குடியிருப்புகள், தெருக்கள், நீர்நிலைகள் ஆகியவற்றை அடையாளம் காண வேண்டும்.

எடுத்துக்காட்டாக, ஆதிதிராவிடர் காலனி, பறையர் தெரு, சக்கிலியர் சாலை போன்ற பெயர்கள் மாற்றம் செய்யப்படும். புதிய பெயர்கள் பொதுவான மற்றும் சாதிச்சார்பற்றவையாக இருக்க வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

நீர் நிலைகளுக்கு ரோஜா, மல்லி, செம்பருத்தி, முல்லை, செண்பகம் ஆகிய பூக்களின் பெயர்களை வைக்கலாம் என்றும் தெருக்கள், சாலைகளுக்கு திருவள்ளுவர், பாரதியார், காந்தி, பெரியார், அண்ணா, காமராஜர், கருணாநிதி ஆகியோரின் பெயர்களை வைக்கலாம் என எடுத்துக்காட்டு கூறப்பட்டுள்ளது. மக்களின் கருத்துக்களையும்,




மதிப்பீட்டையும் அடிப்படையாகக் கொண்டு பெயர் மாற்றம் மேற்கொள்ளப்படும். இதற்காக கிராம சபை மற்றும் ஏரியா சபைகளின் ஒப்புதலும் பெறப்படும்.

அத்துடன், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் வழியாக பெயர் மாற்றங்கள் குறித்த அறிவிக்கைகள் மாவட்ட அரசிதழில் வெளி-யிடப்படும். மாற்றங்கள் செய்யப்பட்டதும், நிலப் பதிவுகள், குடும்ப அட்டைகள், ஆதார் அட்டைகள் மற்றும் அரசு ஆவணங்களில் உள்ள பெயர்களும் தானாக திருத்தப்பட உள்ளன.

இந் நடவடிக்கை அக்டோபர் 14, 2025க்குள் மதிப்பீடும், அக்டோபர் 17க்குள் பொதுமக்கள் ஆலோசனையும் பெற்று அக்டோபர் 24க்குள் அறிவிக்கை வெளியீட்டு ஆட்சேபனை கருத்துகள் பெற வேண்டும். மேலும் நவம்பர் 19க்குள் சம்பந்தப்பட்ட மன்றக் கூட்டத்தில் பொருள் வைத்து மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட அறிவிக்கப்பட்டுள்ளது'' என அதில் கூறப்பட்டுள்ளது.




# பிரச்சினை தீர்க்கும் பிரதோஷ வழிபாடு

சிவபெருமானுக்குரிய விரதங்களில் முக்கியமானது, பிரதோஷம். இந்த விரதத்தை மேற்கொள்பவர்கள், வளர்பிறை மற்றும் தேய்பிறையில் வரும் திரயோதசி திதியில் அதிகாலையில் எழுந்து நீராடி, நித்திய கடன்களை முடிக்க வேண்டும். பிறகு சிவபுராணம், சிவ நாமாவளிகளை படித்து, முடிந்தவரை மவுன விரதம் இருந்து, மாலையில் கோவில் சென்று, சிவதரிசனம் செய்யவேண்டும். அதோடு நந்திக்கு பச்சரிசி வெல்லம் படைத்து, நெய்தீபம் ஏற்றி வணங்கி வருதல் வேண்டும். பிரதோஷ விரதம் முடிந்ததும், வேதம் ஓதும் அந்தணர்களுக்கு தானம் வழங்கி விரதத்தை பூர்த்தி செய்தால் நல்ல பலனைத் தரும்.

மூவுலகிற்கும் ஏற்படவிருந்த பேரழிவை, காத்தருளிய வேளையே, 'பிரதோஷ வேளை'யாகும். வளர்பிறை பிரதோஷம், தேய்பிறை பிரதோஷம் என மாதம் இருமுறை பிரதோஷம் வரும். திரியோதசி திதியில் சூரிய மறைவிற்கு முன்னே, மூன்றே முக்கால் நாழிகை, மறைந்ததற்கு பிறகு மூன்றே முக்கால் நாழிகை என மொத்தம் ஏழரை நாழிகைக் காலம் 'பிரதோஷ காலம்' எனப்படும். குறிப்பாக, மாலை 4.30 மணி முதல் இரவு 7மணி வரை.

சாதாரண நாட்களில் ஒருவர் ஆலயத்திற்கு வரும்போது, மூன்று முறை வலம் வருவார்கள். அதுவே பிரதோஷ தினத்தில், 'சோம சூக்தப் பிரதட்சணம்' முறையில் வலம் வர வேண்டும். திருப்பாற்கடலை கடைந்தபோது வெளிவந்த ஆலகால விஷம், தேவர்களை முன்னும் பின்னும், வலமும் இடமுமாகத் துரத்தியது. தேவர்கள் அஞ்சி நடுங்கி ஒடுங்கி கயிலை மலைக்கு ஓடினார்கள். இறைவனை வலமாக வந்து உள்ளே சென்று பரமனைச் சரணடையலாம் என்று எண்ணிய தேவர்களை, ஆலகால விஷம் அப்பிரதட்சணமாகச் சென்று எதிர்த்தது. இதைக்கண்டு அஞ்சிய தேவர்கள், வந்த வழியே திரும்பினர். ஆலகால விஷம் அந்த பக்கத்திலும் எதிர்த்துச் சென்று பயமுறுத்தியது. இவ்வாறு தேவர்கள் வலமும் இடமுமாய் வந்த அந்த நிகழ்ச்சிதான் 'சோமசூக்தப் பிரதட்சணம்' எனப் பெயர் பெற்றது.

முதலில் சிவலிங்கத்தையும், நந்தியையும் வணங்கிகொண்டு, அப்பிரதட்சணமாகச் சண்டேசுவரர் சன்னிதி வரை சென்று, அவரை வணங்கி கொண்டு, அப்படியே திரும்பி வந்து முன்போல சிவலிங்கத்தையும், நந்தியையும் வணங்க வேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்ய வேண்டும். அப்படி செய்தால் 'அசுவமேத யாகம்' செய்த பலன் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆலயத்தில் பிரதோஷ வழிபாட்டை முடித்தபின் வீட்டிற்குச் சென்று உணவருந்தல் வேண்டும்.

சனிக்கிழமை வரும் பிரதோஷம் மிகவும் விசேஷமானது. பிரதோஷ வழிபாடு செய்ய, திருமால், பிரம்மன் உள்ளிட்ட தேவர்களும் கூட சிவாலயம் செல்வார்கள். ஒவ்வொரு நாளும் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை பிரதோஷ நேரமாகும். இது 'தினப் பிரதோஷம்' எனப்படும். சிவனை வழிபட ஏற்ற காலம் சாயரட்சை. அதிலும் சிறந்தது சோமவாரம். அதனினும் சிறந்தது மாத சிவராத்திரி. அதனினும் சிறந்தது பிரதோஷம். பிரதோஷ தரி சனம் செய்பவர்கள் எல்லா தேவர்களையும் தரிசித்த புண்ணியத்தை பெறுகிறார்கள். தரித்திரம் ஒழியவும், நோய் தீரவும், துயர் நீங்கவும் பிரதோஷ வழிபாடு சிறந்ததாகும்.

நலம் தரும் நந்திகேஸ்வரர்

நந்தி தேவருக்கு 'ருத்ரன்' என்றொரு பெயரும் உண்டு. ருத் - என்றால் துக்கம். ரன் - என்றால் ஓட்டுபவன். ருத்ரன் - என்றால் துக்கத்தை விரட்டுபவன் என்று பொருள். பிரதோஷ காலத்தில் நந்தி தேவருக்கு அருகம்புல் மாலை போட்டு, நெய் விளக்கு ஏற்றி பச்சரிசி வெல்லம் கலந்து வைத்து பூஜை செய்வார்கள்.




# இந்தியாவில் யூரியா தட்டுப்பாடு நோயின் அறிகுறியா?

# மலட்டுத்தன்மையாகும் மண்! பாதிக்கப்படும் நீர் நிலைகள்!

**தொடர்ந்து பல ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அரசுகள் கடைப்பிடித்த தவறான சாகுபடிக் கொள்கையும், நெல் சாகுபடியில் விவசாயிகள் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக நைட்ரஜனைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என்கிற தவறான கருத்தால் தேவைக்கு அதிகமாக யூரியாவை பயன்படுத்துகிறார்கள்.**

1960-களில் அறிமுகப்படுத்தப்பட்ட பசுமைப் புரட்சி காலத்துக்கு முன்னால் வரை ரசாயன உரங்களின் பயன்பாடு ஹெக்டேருக்கு 2 கிலோ மட்டுமே.

மேலும் விவசாயிகள் பெரும்பாலும் இயற்கை உரங்களைத்தான் நம்பியிருந்தனர். தொடர்ந்து 1970-களின் ஆரம்ப ஆண்டுகளில் யூரியா பயன்பாடு இந்தியாவில் 20 லட்சம் டன்னுக்கும் குறைவு. 2010-11-ஆம் ஆண்டுகளில் அதுவே 1.6 கோடி டன்னாக அதிகரித்தது.

ஆனால் தற்போது இந்தியா ஏறத்தாழ 2.1 கோடி டன் யூரியாவைப் பயன்படுத்துகிறது. உலகிலேயே இரண்டாவது அதிகமாக யூரியா பயன்படுத்தும் நாடாக இந்தியா இருக்கிறது. மாநில வாரியாகப் பார்க்கும்போது பஞ்சாப், ஹரியாணா, உத்தர பிரதேசம், ஆந்திரம், தமிழ்நாடு, சமீபத்தில் தெலங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் மிக அதிகமான யூரியா பயன்பாடு காணப்படுகிறது.

இந்த மாநிலங்களில் நெல் சாகுபடி அதிகமாகவும் பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், ஏனைய தானியங்கள் உள்ளிட்டவை குறைவாகவும் பயிரிடப்படுவது அதற்கு முக்கியக் காரணம் என்பதை சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

நெல் சாகுபடி மிக அதிகமான உரம் தேவைப்படும் பயிர். சராசரியாக விவசாயிகள் ஹெக்டேர் ஒன்றுக்கு 150 முதல் 200 கிலோ வரை நெல் சாகுபடியில் யூரியா பயன்படுத்துகிறார்கள். கோதுமைக்கும் அதிகமான உரம் தேவை என்றாலும்கூட நெல் அளவுக்குத் தேவைப்படுவதில்லை, அதனால்தான் நெல் சாகுபடிப் பரப்பு அதிகரிக்கும் போது உரத்துக்கான தேவையும்

அதிகரிக்கிறது. இருப்பினும் பருப்பு வகைகளும், எண்ணெய் வித்துக்களும் மிகக் குறைவான அளவில் உரம் தேவைப்படும் பயிர்கள்.

மேலும் ஹெக்டேருக்கு சுமார் 30 முதல் 40 கிலோ இருந்தாலே போதும். அதைவைத்துப் பார்க்கும்போது தற்போது காணப்படும் உரத் தட்டுப்பாட்டுக்கான அடிப்படைக் காரணம் அரசின் தவறான கொள்முதல் கொள்கை என்று தெரிகிறது.

ஏனெனில் ஆரம்பம் முதலே குறைந்தபட்ச ஆதரவு விலை ஏனைய பயிர்களைவிட நெல்லுக்குத்தான் அதிகமாக இருந்து வருகிறது. ஏனெனில் 23 பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் நெல்லும், கோதுமையும்தான் மிகப் பெரிய அளவில் கொள்முதல் செய்யப்படுகின்றன. குறைந்தபட்ச ஆதரவு விலை உறுதி என்பதால் நெல் சாகுபடி அதற்குப் பொருத்தமில்லாத பகுதிகளில் கூட முன்னெடுக்கப்படுகிறது. இருப்பினும் 1970-க்கு முன்னால் பஞ்சாபில் நெல் சாகுபடி இருக்கவில்லை ஆனால் இப்போது பஞ்சாபின் மிக அதிகமான சாகுபடி பயிராக நெல் மாறிவிட்டது. முன்பு பருத்தியும், தானியங்களும் விளைவித்துக் கொண்டிருந்த தெலங்கானாவில் கடந்த 10 ஆண்டுகளாக நெல் சாகுபடி ஐந்து மடங்கு அதிகரித்திருக்கிறது.

நெல் சாகுபடி அதிகரிக்க, அதிகரிக்க யூரியாவுக்கான தேவையும் அதிகரிக்கிறது. அதனால்தான் இப்போது தெலங்கானாவில் விவசாயிகள் உரங்களுக்காக வரிசையில் காத்திருக்கிறார்கள்.

குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக நைட்ரஜனைப் பயன்படுத்துவதன்மூலம் அதிக மகசூல் பெறலாம் என்கிற தவறான கருத்து நிலவுகிறது. நெல் சாகுபடியில் விவசாயிகள் தேவைக்கு அதிகமாக யூரியாவை பயன்படுத்துகிறார்கள் என்பதை பல்வேறு ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. அளவுக்கு அதிகமாக நைட்ரஜன் பயன்படுத்தும்போது அது ஆவி ஆகி சுற்றுச்சூழலைப் பாதிப்பதுடன் மண் வளத்தையும் பாதிக்கிறது. அளவுக்கு அதிகமான யூரியா பயன்பாட்டால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துவிட்டன.

ஏனெனில் போதுமான அளவில் பாஸ்பரஸ், பொட்டாஷ், இயற்கை உரங்கள் இல்லாமல் நைட்ரஜன் உரங்களைப் பயன்படுத்துவதால் மண்வளம் மலட்டுத்தன்மை அடைகிறது என்கின்றன ஆய்வுகள். நைட்ரஜன்- பாஸ்பரஸ் -பொட்டாஷ் ஆகியவற்றின் அளவு 4:2:1 என்பதாக இருக்க வேண்டும்.

ஆனால் இந்தியாவில் விவசாயிகள் 11:4:1 என்கிற அளவில் பயன்படுத்துகிறார்கள். அதுதான் நெல் சாகுபடிப் பகுதிகள் மலட்டுத்தன்மை அடைந்து




மகசூல் குறைவதற்கான காரணம். ஆகையால் அதிகரித்த நைட்ரஜன் பயன்பாடு விளைநிலத்தைப் பாதிப்பதுடன் நிலத்தடி நீரையும் பாதிக்கிறது. அதனால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் ஏராளம் மேலும் சுற்றிலும் உள்ள நீர்நிலைகளில் ஊடுருவி அவற்றின் நீர்வாழ் உயிரினங்களின் சூழலியலையும் நைட்ரஜன் பாதிக்கிறது.

ஏனெனில் நைட்ரஜனில் இருந்து வெளிவரும் நைட்ரஸ் ஆக்சைடு கரியமில வாயுவைவிட 300 மடங்கு பசுமை இல்ல வாயுவை பாதிக்கும் தன்மையுடையது. அதிகரித்த உரப் பயன்பாடு நைட்ரஸ் ஆக்சைடு வெளியேற்றத்துக்கு காரணியாகிறது.

ஆகையால் யூரியா தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது நோயின் அறிகுறிதான். உண்மையான நோய், அதிகரித்துவரும் நெல், கோதுமை சாகுபடி பரப்பு. நமது வேளாண் பெருமக்களுக்கு பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், ஏனைய தானியங்கள் ஆகியவை பயிரிடுவதற்கு ஊக்கம் அளித்து கூடுதல் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கி, கொள்முதல் செய்வதை ஒன்றிய, மாநில அரசுகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இது பற்றி இயற்கை ஆர்வலர்கள் கூறுகையில் தொடர்ந்து பல ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அரசுகள் கடைப்பிடித்த தவறான சாகுபடிக் கொள்கையும், கொள்முதல் விலையும்தான் உரத் தட்டுப்பாட்டுக்கு அடிப்படைக்காரணம்.

மேலும் அதிகமாக மகசூல் தரும் நெல், கோதுமை விதைகள் அறிமுகப்படுத்தப்பட்டதும், பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டதும், ரசாயன உரங்களுக்கான மானியம் வழங்கப்பட்டதும் யூரியா பயன்பாட்டை பல மடங்கு அதிகரிக்கச் செய்தன.

எனவே யூரியா பயன்பாட்டு குறைத்து இயற்கை உரங்களுக்கு மாறும் முறையை ஒன்றிய, மாநில அரசுகள் முன்னெடுக்க வேண்டும் என்பதே இயற்கை ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.

# வனவிலங்கு பாதுகாப்பில் இந்தியாவின் சிறப்பான செயல்பாடுகளை எடுத்துரைக்கும் கட்டுரையை பிரதமர் பகிர்ந்துள்ளார்



கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வனவிலங்கு பாதுகாப்பில் இந்தியாவின் சிறப்பான செயல்பாடுகளை விளக்கும் வகையில் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் எழுதியுள்ள கட்டுரையை பிரதமர் பகிர்ந்துள்ளார்.

சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு இந்தியாவின் வலுவான உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில், உயிரினங்களைப் பாதுகாப்பதற்கும் அழிந்த வாழ்விடங்களை மீட்பதற்கும் அரசின் முயற்சிகளை இந்தக் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

இது அமிர்த காலத்தில் புலிகள் பாதுகாப்பு குறித்த தொலைநோக்குப் பார்வை (Tiger@2047), பனிச்சிறுத்தை திட்டம், சிறுத்தை திட்டம் மற்றும் டால்பின் திட்டம் போன்ற முக்கிய முயற்சிகளை எடுத்துரைக்கிறது.

மத்திய அமைச்சர் எழுதியுள்ள கட்டுரைக்கு திரு மோடி பதிலளித்திருப்பதாவது:

“கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக உயிரினங்களை பாதுகாப்பதையும், அழிந்த வாழ்விடங்களை மீட்பதையும் நோக்கமாக கொண்டு எவ்வாறு இந்தியாவின் வனவிலங்கு பாதுகாப்பு முயற்சிகள் சிறப்பாக செயல்பட்டுள்ளது என்பது குறித்து இக்கட்டுரையில் மத்திய அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் விளக்கியுள்ளார்.

அமிர்த காலத்தில் புலிகள் பாதுகாப்பு குறித்த தொலைநோக்குப் பார்வை (Tiger@2047), பனிச்சிறுத்தை திட்டம், சிறுத்தை திட்டம் மற்றும் டால்பின் திட்டம் போன்ற முன்முயற்சிகள் வனவிலங்கு பாதுகாப்பிற்கான நம்பிக்கையையும், மனஉறுதியையும் அளிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.”

# பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என கூற முடியாது:

## சென்னை காவல் ஆணையர் அருண்

அண்ணா பல்கலைக்கழக சம்பவத்தை மட்டும் வைத்து பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என கூறமுடியாது எனவும் பெண்களுக்கு எதிரான குற்றம் குறைந்துள்ளதாக காவல் ஆணையர் அருண் தெரிவித்துள்ளார்.

**இது சமூகத்திற்கு தான் கேடு**

சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் புதிதாக அமைக்கப்பட்ட உணவு விடுதியை சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த காவல் ஆணையர் அருண், "பிரஸ் கிளப்பில் உணவு விடுதியை திறந்து வைத்ததில் மகிழ்ச்சி, இந்த மாதத்தில் இரண்டாவதாக உணவு விடுதியை திறந்து வைக்கிறேன்.

காவல் ஆணையர் அலுவலகத்தில் முதலாவதாக விடுதியை துவங்கி வைத்தேன், தற்போது இரண்டாவதாக பிரஸ் கிளப்பில் திறந்து வைக்கிறேன்.

காவல் ஆணையர் அலுவலகத்தில் உணவகம் சரியில்லை என புகார் வந்தது, தற்போது காவலர்கள் இணைந்து மிகக்குறைவாக விலையில் உணவு வழங்குகிறோம். ஆனால் எங்களை விட விலை குறைவாக பிரஸ் கிளப்பில் உள்ள உணவகத்தில் உணவு வழங்குவது ஆச்சரியமாக உள்ளது, தரமும் நன்றாக உள்ளது. பத்திரிக்கையாளர்ளுக்கு சுதந்திரம் உள்ளது, பொதுமக்கள் நன்மைக்காக பேசும்போது பிரீடம் ஆப் ஸ்பீச் உள்ளது. ஆனால் பிரீடம் ஆப் abuse நிறைய நடப்பதாகவும், செய்த தவறை விடுத்து ஒரு நபரை சுட்டிக்காட்டி பேசுவது தவறு எனவும் இதனால் பல நல்ல அதிகாரிகள் நல்லது செய்ய முன்வர பயப்படுவதாகவும், இது சமூகத்திற்கு தான் கேடு எனவும் அவர் குறிப்பிட்டார்.




**பெண்களுக்கு பாதுகாப்பில்லை என கூற முடியாது**

காவல்துறையில் பெண்கள் அதிகப்படியாக பணிபுரிகிறார்கள், ஆனால் ஜர்னலிசத்தில் பெண்களின் பங்கு குறைவாக உள்ளது. பெண்களால் ஏன் ஆண்களுடன் இணைந்து பணியாற்ற முடியவில்லை என யோசித்து பார்த்து முடிவு எடுங்கள் என அவர் தெரிவித்தார். சென்னையை பொறுத்தவரை எந்தவிதமான குறிப்பிட்ட மிரட்டல்களும் இல்லை, இருப்பினும் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக டார்க் வெப் மூலமாக இமெயில் வருவதால் சவாலாக உள்ளது, ஆனால் அது வெறும் வதந்தி என கண்டறிகிறோம். அண்ணா பல்கலைக்கழக சம்பவத்தை மட்டுமே வைத்து பெண்களுக்கு பாதுகாப்பில்லை என கூறமுடியாது. பெண்களுக்கு எதிரான குற்றம் குறைந்துள்ளது. அதன் பிறகு நிறைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது" என அவர் தெரிவித்துள்ளார்.




மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 07.10.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், சுடரினை ஏற்றி வைத்து 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு. எஸ்.இரகுபதி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., துணைத் தலைவர் திரு. அசோக் சிகாமணி, பாரா பாட்மிண்டன் வீரர் மு.ச.சுதர்சன், வேக சறுக்கு வீராங்கனை ஜே.கார்த்திகா மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



08.10.2025 அன்று திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், சுக்கம்பாளையத்தில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், திரு. மு. பெ. சாமிநாதன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி, மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆகியோர் கார்த்திகேயா நெசவு பூங்கா (Mini Textile Park) - னை திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு செயலாளர், திருமதி வே. அமுதவல்லி, இ.ஆ.ப., துணிநூல் துறை இயக்குநர் திருமதி இரா. லலிதா, இ.ஆ.ப., திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் நாரணவரே மனீஷ் ஷங்கர்ராவ், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடைகளில் சுதேசி பொருட்கள் விற்பனை 'போர்டு'






இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொருட்களையே அனைவரும் வாங்கவேண்டும் என்ற வகையில் சுதந்திர போராட்டத்தின்போது மகாத்மா காந்தி 'சுதேசி' இயக்கத்தை தொடங்கி தீவிர பிரசாரம் செய்தார். அதைத்தொடர்ந்துதான் தூத்துக்குடியில் சுதேசி கப்பலை சுதந்திர போராட்ட வீரர் வ.உ.சிதம்பரம் பிள்ளை ஓட்டி இன்றளவும் கப்பலோட்டிய தமிழன் என்று புகழப்படுகிறார்.

அடுத்து நெருக்கடி நிலையின்போது இந்திராகாந்தி, "இந்தியனாக இரு, இந்திய பொருட்களையே வாங்கு" என்ற கோஷத்தை முன்னெடுத்து எல்லோரும் இந்திய பொருட்களையே வாங்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஆக சுதேசி பொருட்களையே வாங்கவேண்டும் என்ற உணர்வு மக்கள் மனதில் விதைக்கப்பட்டாலும் அது செடியாகவோ, மரமாகவோ வளரவில்லை. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இந்திய பொருட்களுக்கு வரிசையாக அதிக வரி விதித்துக்கொண்டு இருக்கும் நிலையில் பிரதமர் நரேந்திர மோடி, மக்கள் அனைவரும் சுதேசி பொருட்களையே வாங்கவேண்டும் என்ற ஒரு பிரகடனத்தை தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்.

இந்த கருத்தை நீண்ட நெடுங்காலமாகவே அவர் வலியுறுத்தி வருகிறார். ஆகஸ்டு 15-ந்தேதி டெல்லி செங்கோட்டையில் தேசிய கொடியேற்றி வைத்துவிட்டு ஆற்றிய உரையின்போது, வியாபாரிகள் அனைவரும் தங்கள் கடைகளுக்கு வெளியே எங்கள் கடையில் சுதேசி பொருட்களை விற்கிறோம் என்ற போர்டுகளை வைக்கவேண்டும் என்று கூறினார்.

சுதேசி பொருட்களைத்தான் வாங்கவேண்டும் என்று மக்கள் மனதில் முடிவு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் கடந்த வாரம் திங்கட்கிழமை பா.ஜனதா தொண்டர்களிடம் பேசும்போது, ஒவ்வொரு கடையிலும் சுதேசி பொருட்கள் இங்கு விற்கப்படுகின்றன என்ற போர்டு வைக்கப்பட்டுள்ளதை பா.ஜனதா தொண்டர்கள் உறுதி செய்யவேண்டும்.

வெளிநாட்டு பொருட்களை மக்கள் எவ்வளவு குறைவாக சார்ந்து இருக்கிறார்களோ அது நமது நாட்டுக்கு நல்லது என்று அழுத்தம் திருத்தமாக பேசியிருக்கிறார்.

பா.ஜனதா தொண்டர்களை சுதேசி பொருட்கள் விற்பனைக்கான போர்டு வைக்கப்பட்டு இருப்பதை உறுதி செய்ய கேட்டுக்கொள்வதற்கு பதிலாக அரசு உத்தரவிட்டால் அனைவரும் இதை முழுமையாக செயல்படுத்துவார்கள்.

# விரைவில் வீட்டு நாய்களுக்கு மைக்ரோ சிப் சென்னை மாநகராட்சி ஆணையர் உத்தரவு!




சென்னை மாநகராட்சி (GCC) அடுத்த வாரம் முதல் வீட்டில் வளர்க்கும் வளர்ப்பு நாய்களுக்கு மைக்ரோசிப் பொருத்தத் தொடங்குகிறது இதனால் வளர்ப்பு நாய்களை உரிமையாளர்கள் கைவிடுவதைத் தடுக்க இது உதவும்.

மேலும், அவற்றின் தடுப்பூசி நிலை மற்றும் உரிமங்களை கண்காணிக்கவும் இது வழிவகுக்கும். கோவிட்-19 தொற்றுக்குப் பிறகு, வளர்ப்பு நாய்களை கைவிடுவது அதிகரித்துள்ளது. இது ஒரு பெரிய பிரச்சனையாக மாறியுள்ளது.

மேலும் தெரு நாய்களுக்கு ஏற்கனவே மைக்ரோசிப் பொருத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். மேலும் காயமடைந்த தெரு நாய்களுக்கு சிகிச்சை அளிக்க மூன்று தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் (NGOs) GCC இணைந்துள்ளது. இதனால் மைக்ரோசிப் பொருத்துவது செல்ல நாய்களை கைவிடும் நிலை மாறும். மேலும் வழக்குகளைக் குறைக்க உதவும் என்று மாநகராட்சி ஆணையர் கவுன்சிலுக்கு உறுதியளித்துள்ளார்.

இது பற்றி வார்டு 152-ஐ சேர்ந்த எஸ். பாரதி சில தகவல்லைகளை தெரிவித்தவர் காயமடைந்த தெரு நாய்களுக்கு Blue Cross of India போன்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சிகிச்சை அளிப்பதில்லை. மற்ற நாய்களுக்கு நோய் பரவும் அபாயம் இருப்பதால், அவை நாய்களை ஏற்க மறுக்கின்றன. இந்த நிலைமை பொதுமக்களுக்கும், மற்ற தெரு விலங்குகளுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது என்று கூறினார்.

மேலும் இது பற்றி GCC ஆணையர் ஜே.குமரகுருபரன் கூறியதாவது:-

தெரு நாய்களுக்கு மைக்ரோசிப் பொருத்தும் பணி ஏற்கனவே நடந்துள்ளது. அதனைத் தொடர்ந்து செல்ல நாய்களுக்கான இந்த திட்டம் அடுத்த வாரம் தொடங்கும். இது செல்லப் பிராணிகளை கைவிடுவதைக் கட்டுப்படுத்த உதவும். மேலும், தடுப்பூசி மற்றும் உரிமங்களை சிறப்பாக கண்காணிக்க அனுமதிக்கும். குறிப்பாக, புகார்களின் அடிப்படையில் இந்த சிகிச்சை அளிக்கப்படும். என்று அவர் கூறினார்.

இது பற்றி பொதுமக்கள் கூறிய கருத்து;-

சமீபகாலமாக பல்வேறு பகுதிகளில் தெருநாய்கள் அதிகரித்த வண்ணம் இருக்கக்கூடிய நிலையில் இது போன்ற மைக்ரோ சிப் பொருத்துவது பலனளிக்கும் எனவே இதை பேரிடர் நடவடிக்கையாக மாநகராட்சி நிர்வாகம் செய்திட வேண்டும் என்று பொதுமக்கள் கருத்து தெரிவித்தனர்

# வங்கிக்கடன் விதிமுறைகளை தளர்த்திய ரிசர்வ் வங்கி!

வாடிக்கையாளர்களுக்கு மலிவான மற்றும் நெகிழ்வான கடன்களை வழங்குவதற்கும், தங்க நகை கடன்கள் எளிதாகக் கிடைக்கவும், வங்கிகள் மூலதனத்தை எளிதாகத் திரட்டவும் ரிசர்வ் வங்கியின் புதிய விதிகள் உறுதியளிக்கின்றன. இதற்கிடையில், வரைவு திட்டங்கள் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை நீட்டித்து கடன் அறிக்கையிடலை விரைவுபடுத்தும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் வங்கிக் கடனை நவீனப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ரிசர்வ் வங்கி செப்டம்பர் 29ஆம் தேதி வங்கிகளுக்கு ஏழு உத்தரவுகளை வெளியிட்டது. அவற்றில் மூன்று விதிமுறைகள் அக்டோபர் 1ஆம் தேதி முதல் செயல்படுத்தப்படுகின்றன. மீதமுள்ள நான்கு விதிமுறைகள் அக்டோபர் 20ஆம் தேதி வரை ஆலோசனைக்கு உட்படுத்தப்பட்டு அதன் பின்னர் செயல்படுத்தப்படும். இந்த உடனடி மாற்றங்கள் வங்கிகளுக்கு கடன் வழங்குவதில் அதிக நெகிழ்வுத்தன்மையை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடன்களுக்கான வட்டி விகித வேறுபாடுகளை இப்போது விரைவாக சரிசெய்ய முடியும் என்று ரிசர்வ் வங்கி கூறுகிறது. மேலும்

வாடிக்கையாளர்களுக்கான சில கட்டணங்களை மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தி வைப்பதற்குப் பதிலாக எந்த நேரத்திலும் குறைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மீட்டமைப்பு கட்டத்தில் வாடிக்கையாளர்கள் தனிநபர் கடன்களை ஃபுளோட்டிங் வங்கி விகிதங்களிலிருந்து நிலையான விகிதங்களுக்கு மாற்றவும் வங்கிகள் அனுமதிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

மறுபுறம் தங்கம் மற்றும் வெள்ளி கடன்களின் வரம்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் நகைக்கடைக்காரர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த பணி மூலதனக் கடன்கள், இப்போது தங்கத்தை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் அனைத்து உற்பத்தியாளர்களுக்கும் கிடைக்கும். 3ஆம் அடுக்கு மற்றும் 4ஆம் அடுக்கு நகரங்களில் உள்ள சிறிய நகர்ப்புற கூட்டுறவு நிறுவனங்களும்






இந்தத் தொழிலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டு அவை கடன் அணுகலை அதிகரித்துள்ளன.

அதேபோல, மூலதன விதிகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

மேலும் வெளிநாட்டு நாணயம் மற்றும் வெளிநாட்டு ரூபாய் பத்திரங்களை அடுக்கு 1 மூலதனமாகப் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி தளர்த்தியுள்ளது. இந்த மாற்றம் வங்கிகள் உலகளாவிய சந்தைகளை அணுகுவதை எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தங்கக் கடன் திட்டத்திற்கான திருப்பிச் செலுத்தும் காலம் 270 நாட்களுக்கு நீட்டிக்கப்படலாம். மேலும் அவுட்சோர்ஸ் நகை உற்பத்தியாளர்களையும் சேர்க்கலாம்.

அதேபோல, கடன் அறிக்கையிடல் துரிதப்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நகைக் கடனைப் பொறுத்தவரையில், பொதுவாக வங்கிகள் தங்கம் மற்றும் வெள்ளியை எந்த வடிவத்திலும் வாங்குவதற்கு கடன் வழங்குவது அல்லது முதன்மை தங்கம், வெள்ளியின் பாதுகாப்பிற்கு எதிராக கடன் வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இருப்பினும், நகைக்கடைக்காரர்களுக்கு செயல்பாட்டு மூலதனக் கடன்களை வழங்குவதற்காக திட்டமிடப்பட்ட வணிக வங்கிகளுக்கு (ஷிசிஙிஙெ) ரிசர்வ் வங்கி ஒரு புதிய முறையை அனுமதித்துள்ளது. வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் வங்கிகளின் நலனுக்காக இதுபோன்ற நடவடிக்கைகளை ரிசர்வ் வங்கி தொடர்ந்து எடுத்து வருகிறது. அதேபோல தவறு செய்யும் வங்கிகள் மீது ரிசர்வ் வங்கி கடுமையான நடவடிக்கைகளையும் எடுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது

இந்தியாவின் அண்டைநாடு நேபாளம் ஆகும் இருநாடுகளுக்கும் இடையே 1,751 கி.மீ. தூரம் எல்லைக்கோடு இருக்கிறது. மேலும் இந்தியாவில் உள்ள சிக்கிம், மேற்குவங்காளம், பீகார், உத்தரபிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய 5 மாநிலங்களின் எல்லையில் நேபாளம் இருக்கிறது.

இந்த நாட்டின் மொத்த மக்கள்தொகை 2.96 கோடியாகும். 2001-ம் ஆண்டு வரை இங்கு மன்னர் ஆட்சி இருந்து வந்தது ஏனெனில் அந்த ஆண்டில் மன்னர் பிரேந்திரா கொல்லப்பட்ட பிறகு மன்னராட்சி முடிவுக்குவந்தது பின்னர் ஜனாதிபதியின் நிர்வாகம் வந்தது. அதனைத் தொடர்ந்து இந்த நாட்டின் பிரதமராக சர்மாஒலி 3 முறை இருந்தார். ஆனால் கடந்த 8-ந்தேதி அங்கு இளைஞர்படை கொதித்தெழுந்து நடத்திய போராட்டத்தால் அவர் ராஜினாமா செய்து ஓடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதற்கு 26 சமூக வலைதளங்களுக்கு விதிக்கப்பட்ட தடை ஒருகாரணமாக சொல்லப்பட்டாலும், அதுவே முழுமையான காரணமல்ல ஏனெனில் அந்த நாட்டில் தலைவிரித்தாடும் கடுமையான வேலை-யில்லாத் திண்டாட்டம், லஞ்சஊழல், அதிகார துஷ்பிரயோகம், தாங்கமுடியாத விலைவாசி உயர்வு, உள்கட்டமைப்பு வசதிகள் இல்லாதது, அதிகாரத்தில் உள்ளவர்களின் பிள்ளைகளுடைய ஆடம்பர வாழ்க்கை என்பதெல்லாம் 1996 முதல் 2010 வரை பிறந்த தலைமுறையான 'ஜென் இசட்' என்று சொல்லப்படும் இளைஞர் பட்டாளத்தின் மனதில் நீருபூத்த நெருப்பாக கொதித்துக்கொண்டிருந்தது என்பதே நிதர்சனம் இந்நிலையில்தான்.

எப்போது இந்த கனல் பற்றி எரியத்தொடங்குமோ? என்று எல்லோரும்

# நேபாளத்தை புரட்டிப்போட்ட இளைஞர் படை!





எதிர்பார்த்துக்கொண்டிருந்த சூழ்நிலையில் சில நாட்களுக்கு முன்பு கோஷிமாகாண மந்திரி ராம்பகதூர்மகர் சென்ற ஜீப்பானது லலித்பூரில் 11 வயது பள்ளி மாணவி மீது மோதிவிட்டு கொஞ்சம்கூட கண்டுகொள்ளாமல் அங்கு இருந்து சென்றுவிட்டது. இந்த செயலால் காயமடைந்த மாணவி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். கீழேவிழுந்த மாணவியை மோதித்தள்ளிய மந்திரியும் கண்டுகொள்ளவில்லை மேலும் இந்த கொடுஞ் செயலை சாதாரண விபத்துதான் என்று பிரதமர் சர்மாஒலி சொல்லியது காட்டுத்தீப்போல அனைத்து கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் மட்டுமல்லாமல், சாதாரண டீக்கடைகளில்கூட ஆத்திரத்துடன் அனைவரையும் பேசவைத்தது.

அவ்வளவுதான் 'ஜென் இசட்' இளைஞர் பட்டாளம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மக்களுமே தீவிர போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தின்போது மந்திரிகளின் வீடுகள் சூறையாடப்பட்டதோடு, மந்திரிகளையும் ஓடஓட விரட்டி துரத்தியடித்தது போன்ற காட்சிகளும் பரபரப்பை ஏற்படுத்தின. இந்த வன்முறை சம்பவத்தில் 51 பேர் உயிரிழந்தனர். 1,700-க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். போராட்டக்காரர்களின் ஒரேகோரிக்கை பிரதமரும், மந்திரிகளும் ராஜினாமா செய்யவேண்டும் என்பதுதான். நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ராணுவம், பிரதமர் சர்மாஒலியை ராஜினாமா செய்யச்சொல்லியது அதைத்தொடர்ந்து அவரும் தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ராஜினாமா செய்துவிட்டார்.

பின்னர் புதிய பிரதமர் ஒருவரை ஜனாதிபதி நியமிக்க 4 பேர் பட்டியல் பரிசீலிக்கப்பட்டது. ஆனால் 'ஜென் இசட்' படை பல நல்ல தீர்ப்புகளை வழங்கிய ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதியும், நேர்மையின் சின்னம் என அழைக்கப்பட்டவருமான சுசீலா கார்கியைத்தான் பிரதமராக நியமிக்கவேண்டும் என்று வலியுறுத்தவே அவரே இப்போது பதவியேற்றுள்ளார். சுசீலா கார்கி, நேபாள நாட்டின் முதல் பெண் தலைமை நீதிபதியும், முதல் பெண் பிரதமரும் ஆவார்.

தற்போது நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் புதிதாக தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு இருந்த சர்மாஒலி இந்தியாவுடன் அவ்வளவு நல்ல உறவு வைத்துக் கொண்டவர் அல்ல. மேலும் இவர் சீனாவுடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தார். ஆனால் இப்போது பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட சுசீலா கார்கியின் ஆட்சியில், இந்தியாவுடன் நல்லுறவை நேபாளம் கொண்டிருக்கும் என்று உறுதியாக நம்பப்படுகிறது.

மொத்தத்தில் வேலையில்லாத் திண்டாட்டம், லஞ்சஊழல், அதிகார துஷ்பிரயோகத்தை பயன்படுத்தி சொகுசு வாழ்க்கை, விலைவாசி உயர்வு போன்ற சமூகபிரச்சினைகளை இன்றைய இளைஞர் சமுதாயம் தாங்கிக்கொள்ளாது, அவைகளை பார்த்து பொறுத்துக்கொள்ளாது என்பது நேபாளத்தில் வெட்டவெளிச்சமாகியுள்ளது இந்த இளைஞர்களின் போராட்டம் உலகிற்கு ஒரு பாடம் என உலக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்

# தங்கம் விலை உயர காரணம் தெரியுமா?

உலகின் தொடக்க காலங்களில் தங்கத்தைக் கொண்டு தான் நாணயம் தயாரிக்கப்பட்டது. 1919-ம் ஆண்டிலிருந்து தங்கத்திற்கு என விலை நிர்ணயம் செய்யும் நடைமுறை தொடங்கப்பட்டது. 1944-ல் அமெரிக்க டாலர் மதிப்பில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்பட்டது. இதற்காக போடப்பட்ட ஒப்பந்தம் பிரெட்டன் உட்ஸ் ஒப்பந்தம் எனப்படுகிறது. இதன்படி ஒரு அவுன்ஸ், அதாவது 31.10 கிராம் (ஒரு பவுன் - 8 கிராம்) 24 காரட் தங்கத்தின் விலை 35 டாலராக நிர்ணயிக்கப்பட்டது. அப்போது இந்திய ரூபாய் மதிப்பில் ஒரு அவுன்ஸ் விலை வெறும் ரூ.103 மட்டுமே அதாவது ஒரு கிராம் தங்கம் ரூ.3.32 ஆக இருந்தது.

மேலும் 1971-ம் ஆண்டு வரை இந்த நடைமுறை நிலவியது மேலும் அதே ஆண்டு ஆகஸ்டு 15-ந்தேதி அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன், பிரெட்டன் உட்ஸ் ஒப்பந்தத்தை ரத்து செய்து, டாலருடன் இணைக்கப்பட்ட தங்கத்தின் விலையை நடைமுறையில் இருந்து நீக்கினார். அன்று முதல் தங்கத்தின் விலை சந்தையின் அடிப்படையில் தினந்தோறும் மாறத் தொடங்கியது. தங்கம் விலை வேகமாக உயரத் தொடங்கியதற்கான ஆரம்பம் அதுவே. அப்போது ஒரு கிராம் 24 காரட் தங்கம் ரூ.3.32 ஆக இருந்தது. ஆனால் தற்பொழுது ஒரே நாளில் 2 முறை உயர்ந்து ஒரு பவுன் தங்கம் ரூ.91,080 என கற்பனைக்குப் புலப்படாத அளவுக்கு உயர்ந்துவிட்டது. இந்தியாவை பொறுத்தவரை தங்கமே செல்வத்தின் அடையாளமாக கருதப்படுகிறது.

மேலும் இந்திய குடும்பங்களில் மட்டும் தற்போது 25 ஆயிரம் டன்னுக்கும் மேற்பட்ட 22 காரட் தங்கம் இருப்பதாக உலக தங்க கவுன்சில் கூறுகிறது. இன்றைய சந்தை மதிப்பில் இது ரூ.188 லட்சம் கோடியாக மதிப்பிடப்படுகிறது. இங்கு ஏழை வீடாக இருந்தாலும், சிறிது 'பொட்டு தங்கம்' கண்டிப்பாக இருக்கும். இப்போது வீடுகளில் மட்டுமல்ல, அரசாங்கங்களும் தங்கத்தை வாங்கி கையிருப்பில் வைத்துக் கொள்கின்றன. உலக வரலாற்றிலேயே 2022-ம் ஆண்டு தான் நாடுகளின் மத்திய வங்கிகள் அதிக அளவில் தங்கத்தை வாங்கிய வருடமாகும். இதுமட்டுமல்லாமல், நாடுகளில் நாம் ஏன் அமெரிக்க டாலரை அடிப்படையாக வைத்து வர்த்தகம் நடத்த வேண்டும்? தங்கத்தை அடிப்படையாக வைத்து பரிமாற்றங்களை நடத்தக்கூடாதா?' என்ற உணர்வு உருவாகத் தொடங்கியுள்ளது.



மேலும் ரஷியா மீது அமெரிக்கா விதித்த தடைகள், சீனா மற்றும் இந்தியா மீது விதிக்கப்பட்ட வரி உயர்வுகள், மத்திய கிழக்கு நாடுகளின் போர் பதற்றங்கள் போன்றவைகள் அனைத்தும் நாடுகளை தங்கத்தை வாங்கி குவிக்கத் தூண்டி வருகின்றன. எதிர்காலத்தில் அனைத்து நாடுகளும் தங்களது ஏற்றுமதி, இறக்குமதியை டாலருக்கு பதிலாக தங்கத்தின் அடிப்படையில் நடத்தலாம் என்ற முடிவுக்கு வரத் தொடங்கியுள்ளன.

மேலும் இந்த கருத்தை முன்னெடுத்து வரும் ரஷியாவில், தங்கத்தை அவர்களின் மொழியில் 'ஜோலதோ' என்று அழைக்கிறார்கள். அதனால் இப்போது உருவாகும் முழக்கம்: 'டாலருக்கு பதிலாக ஜோலதோ'. அதாவது, டாலருக்கு பதிலாக தங்கமே உலக வர்த்தகத்தின் அடிப்படை ஆகும் என்ற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த சூழ்நிலையால், அனைத்து நாடுகளின் மத்திய வங்கிகளும் தங்கத்தை வாங்கி கையிருப்பில் வைத்துக் கொள்ளத் தொடங்கியதால், நிச்சயமாக மக்கள் வாங்கும் 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை ஒரு பவுன் ரூ.1 லட்சத்தை விரைவில் எட்டத்தான் செய்யும் என உலக வர்த்தகத்தை உற்று நோக்கும் அறிஞர்கள் உறுதிப்பட கூறுகின்றனர்

# கலெக்டர் அனுமதியில்லாமல் பனைமரத்தை வெட்டக்கூடாது அரசு உத்தரவு

தமிழர்களின் வாழ்வோடும், வரலாற்றோடும் பின்னிப் பிணைந்து இருந்த பனைமரத்தை 1988-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந்தேதி மாநில மரமாக தமிழக அரசு பிரகடனப்படுத்தியது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அய்யன் வள்ளுவர் தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக் கொள்வர் பயன் தெரிவார் என்றார்.

அதாவது தக்க சமயத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் தினை போன்று சிறியதாக இருந்தாலும், அந்த உதவியினால் பயன் பெற்றவர் அதனை பனை போன்று பெரிதாக கருதுவார்கள் மேலும் சேரமன்னர்கள் எதிரிகளோடு போரில் வெற்றி பெற்று வாகை சூடும் நேரத்தில் பனைப் பூவைத்தான் சூடியுள்ளனர். அவர்களின் அரச முத்திரையிலும் வில் யானையுடன், பனை மரத்தையும் பயன்படுத்தியுள்ளனர். அத்துடன் பழந்தமிழ் இலக்கியங்கள் எல்லாம் ஏன் திருக்குறள் கூட பனை ஓலைச் சுவடிகளில்தான் எழுதப்பட்டன.

மேலும் தமிழ்நாட்டில் பல கோவில்களில் தல விருட்சமாக பனை மரமே உள்ளது. வேர் முதல் உச்சி வரை அனைத்து பாகங்களும் பயன் தரும் என்றால் அது பனை மரம் ஒன்றுதான். பண்டையகால மன்னர்கள் பனைமர வளர்ப்பிலும், பனை மரத்தை வெட்டக்கூடாது என்பதிலும் அதிக முனைப்போடு இருந்தனர், அத்துடன் காஞ்சிபுரம் அருகில் உள்ள திருப்பனங்காடு கிருபாநாதேஸ்வரர் கோவிலில் 15-ம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றில்;உயிருள்ள பனை மரங்களை வெட்டக்கூடாது என்ற உத்தரவு செதுக்கப்பட்டுள்ளது. அதுபோல சீர்காழியில் உள்ள சோழர் கால கல்வெட்டில் பயிரிட பயன்படாத நிலங்களில் பனை மரங்களை நடவு செய்யவேண்டும் என்ற ஆணையும் இருக்கிறது.

இந்நிலையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக கணக்குப்படி, நாட்டில் உள்ள 10 கோடி பனை மரங்களில் 5 கோடி மரங்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கிறது, மேலும் நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆயுளை கொண்டது பனை மரம் இத்தகைய பனை மரங்களின் எண்ணிக்கை இப்போது வெகுவாக குறைந்து வருவதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதை வெட்டுவதை தடுக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.




இதற்காக மாவட்ட கலெக்டர் தலைமையில் மாவட்ட கண்காணிப்பு குழுவும், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தலைமையில் வட்டார கண்காணிப்பு குழுவும் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது மேலும் வட்டார அளவிலான குழு ஆய்வு மேற்கொண்டு எத்தனை பனை மரங்கள் இருக்கின்றன? என்பதை கிராம நிர்வாக அலுவலர் துணையோடு கணக்கிட்டு பயிர்சாகுபடி பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும், மேலும் தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் பனை மரத்தை வெட்டியே தீரவேண்டும் என்ற நிலை வந்தால் அதற்கான அனுமதியை மாவட்ட கலெக்டர் தலைமையிலான குழுவிடம் இருந்துதான் பெறவேண்டும் என்று அந்த ஆணையில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் கலெக்டர் அனுமதியில்லாமல் ஒரு பனை மரத்தைக்கூட வெட்ட முடியாது, ஒருவேளை அனுமதி கிடைத்தாலும் ஒரு பனை மரத்தை வெட்டினால் அதற்கு ஈடாக 10 பனை மரக்கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும். அரசின் இந்த உத்தரவு நிச்சயமாக பனை மரங்கள் முறையற்று வெட்டப்படுவதை தடுத்து பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவும், இதற்கிடையே ஆறு கோடி பனைமர விதைகளை விதைக்க திட்டமிட்டுள்ள தமிழக அரசின் முயற்சி பாராட்டுக்குரியது ஆகும்.

மேலும் கடைநிலை ஊழியர்களும் பனை மரம் குறித்து பதிவு செய்து, அதனை முறையாக பராமரிக்கவேண்டும். பனை மரங்களை காப்பாற்றுவதோடு, அவற்றில் இருந்து கிடைக்கும் பொருட்களை சந்தைப்படுத்தவும் அரசு உரிய உதவிகளை செய்யவேண்டும் என்பதே பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

# அதிகரிக்கும் ஆன்லைன் மோசடிகள்.. கட்டுப்படுத்த புதிய திட்டம்.. ரிசர்வ் வங்கி முடிவு!

இந்தியாவில் இப்போது டிஜிட்டல் பரிவர்த்தனைகளை மக்கள் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இதில் மோசடிகளும் அதிகமாக நடக்கிறது. ஆன்லைன் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது கவனமாக இருக்க வேண்டும் என்று வங்கிகளும் ரிசர்வ் வங்கியும் தொடர்ந்து எச்சரித்து வருகின்றன.

இது தொடர்பாக இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது முக்கியமான வழிமுறைகளை வழங்கி வருகிறது. இருப்பினும், இன்று நம் நாட்டில் பலருக்கு சைபர் மோசடிகள் ஒவ்வொரு நாளும் நடக்கிறது சிலர் ஆன்லைனில் லட்சக்கணக்கான ரூபாய்களை ஏமாந்துள்ளனர். எனவே இந்த மோசடியைத் தடுக்க இந்திய ரிசர்வ் வங்கி இப்போது ஒரு பெரிய முடிவை எடுத்துள்ளது.

இந்த முடிவின் மூலம் ஆன்லைன் நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது எந்த மோசடிகளும் அல்லது கொள்ளைகளும் இருக்காது மேலும் ரிசர்வ் வங்கியின் இந்த முடிவு வரவேற்பைப் பெற்றுள்ளது. மேலும் சைபர் கிரைம் மற்றும் ஆன்லைன் மோசடியைத் தடுக்க OTP சரிபார்ப்பு செயல்முறையை மட்டும் நம்பியிருக்க வேண்டாம் என்று ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது. இதற்காக, இரண்டு காரணி அங்கீகார செயல்முறையை செயல்படுத்த ரிசர்வ் வங்கிமுடிவு செய்துள்ளது.

மேலும் இந்த முடிவு நாடு முழுவதும் செயல்படுத்த சிறிது நேரம் எடுக்கும். இருப்பினும் ரிசர்வ் வங்கியின் இந்தத் திட்டம் அதிக பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ், SMS அடிப்படையிலான OTP சரிபார்ப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முடிவின் கீழ், ஆன்லைன் நிதி பரிவர்த்தனைகளுக்கும் கடவுச்சொல் தேவைப்படும். இந்த திட்டம் வருகிற 2026ஆம் ஆண்டின் ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இருப்பினும் இதற்கான அதிகாரர்ப்பூர்வ அறிவிப்பு இன்னும் குறுகிய காலத்திற்குள் வரவேற்பதாகவும் பின்னர் இந்தத் திட்டம் அமலுக்கு வந்த பிறகு



நீங்கள் டிஜிட்டல் நிதி பரிவர்த்தனைகளைச் செய்ய விரும்பினால் முதலில் உங்களுக்கு ஒரு OTP கிடைக்கும். அதன் பிறகு, நீங்கள் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டும். இது இரண்டு காரணி அங்கீகாரம் என்று அழைக்கப்படுகிறது. இரண்டு காரணி அங்கீகாரத்தின் கீழ் பரிவர்த்தனையைச் செய்வது நீங்கள்தானா என்று சரிபார்க்கப்படும்.

குறியீடு பொருந்தினால் மட்டுமே தொடர்புடைய நிதி பரிவர்த்தனை நிறைவடையும்.

இரண்டு காரணி அங்கீகாரத்தைச் செய்யும்போது, உங்கள் மொபைல் போன் கடவுச்சொல் அல்லது பயோமெட்ரிக் அங்கீகாரம் மூலம் உங்கள் அடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இந்த வசதி செயலி அடிப்படை கொண்டதாக இருக்கும்.

இந்த திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்படுவதற்கு நாம் சிறிது காலம் காத்திருக்க வேண்டியிருந்தாலும், எதிர்காலத்தில் ஆன்லைன் மோசடி வழக்குகள் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் மக்கள் பணப் பரிவர்த்தனைகளில் சந்திக்கும் பிரச்சினைகள் மற்றும் மோசடிகளைத் தடுக்க இந்திய ரிசர்வ் வங்கி இது போன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது

# சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு பாலியல் கல்வி கற்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் அறிவுரை




உத்தரபிரதேசத்தின் சம்பல் மாவட்டத்தில் உள்ள ஹயாத் நகர் காவல் நிலையத்தில் மைனர் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட 15 வயது சிறுவனின் ஜாமீன் மனு மீதான விசாரணையின் போது, தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை (FIR) இலிருந்து உருவானது.

மேலும் 10 ஆம் வகுப்பு படிக்கும் சிறுமியை, சிறுவன் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று பிறகு பாலியல் செயலில் ஈடுபட வற்புறுத்தியதாக அந்த புகாரில் கூறப்பட்டிருந்தது பின்னர் சிறுமி கர்ப்பமானதை தொடர்ந்து ஐபிசி பிரிவுகள் 376 மற்றும் 506 மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டத்தின் பிரிவு 6 ஆகியவற்றின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆரம்பத்தில், சிறார் நீதி வாரியம் ஜாமீன் மறுத்தது, இந்த முடிவை அமர்வு நீதிமன்றம் மற்றும் அலகாபாத் உயர் நீதிமன்றம் உறுதி செய்தது இருப்பினும், அதனைத் தொடர்ந்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் குமார் மற்றும் அலோக் ஆராதே ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு செப்டம்பர் 2025 இல் விசாரணைக்கு வந்தது மேலும் தொடர்ந்து நடந்து வந்த இந்த விசாரணையில் இந்த அமர்வு கூறியதாவது:-

பாதிக்கப்பட்டவரும் குற்றம் சாட்டப்பட்டவரும் இளம் பருவத்தினர் என்பதைக் கவனத்தில் கொண்டு சிறார் நீதி வாரியத்தால் வகுக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் சிறுவனை விடுவிப்பதற்கான இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. அக்டோபர் 8 அன்று, நீதிமன்றம் இந்த முடிவை இறுதி செய்தது, மேலும் உயர் நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பை ரத்து செய்தது மேலும் இந்த வழக்கு விசாரணையின் போது உத்தரபிரதேச அரசு, NCERT வழிகாட்டுதல்களின்படி பாலியல் கல்வி தற்போது IX வகுப்பில் தொடங்குகிறது என்பதை குறிப்பிட்டு ஒரு பிரமாணப் பத்திரத்தை சமர்ப்பித்தது. ஆனால் இதற்கு அதிருப்தி தெரிவித்த உச்சநீதிமன்றம் உயர்நிலைப் பள்ளிக்கு முன்பே மாணவர்களை உடல், உணர்ச்சி மற்றும் சமூக மாற்றங்களுக்குத் தயார்படுத்துவதன் முக்கியத்துவத்தை அரசு உணர வேண்டும், எனவே இந்த பருவத்திலேயே பொறுப்பான நடத்தை குறித்தும் மேலும் பருவமடைதல் மற்றும் பாலியல் நடத்தை குறித்த ஆரம்பகால விழிப்புணர்வு பற்றி கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது.

மேலும் இளம் பருவத்தின் சவால்களுக்கு குழந்தைகளை சிறப்பாக தயார்படுத்த பாடத்திட்டத்தை மறு மதிப்பீடு செய்து மேம்படுத்துமாறு கூறிய நீதிமன்றம் இந்த நிலையின் அவசரத்தை உணர்ந்து எடுத்துக்காட்டாக அமையும் வகையில் இருக்க வேண்டும் என்பதை கல்வி அதிகாரிகளுக்கு வலியுறுத்தி கூறுவதாகவும் உச்சநீதிமன்றம் இந்த பரிந்துரையை அடிக்கோடிட்டுக் காட்டி அறிவுரை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது




பாகம் - 2

# ஜாதகத்தில் உங்கள் எதிர்காலம்!

- H. காஞ்சசன்

**4. தசா காலநிலை**

எதிர்காலம் பற்றி விரிவாகச் சொல்லும் முக்கிய கருவி தசா காலம்.

ஒவ்வொரு கிரகமும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வாழ்க்கையை கட்டுப்படுத்தும்.

உதாரணம்: சுக்கிர தசா வந்தால் காதல், கலை, செல்வம் அதிகம். சனி தசா வந்தால் சோதனை, உழைப்பு.

அதாவது, ஒரு நபரின் வாழ்க்கை நேரடியாக எந்த கிரக தசா நடக்கிறது என்பதில்தான் அடிப்படை.

**5. கோச்சாரம் கிரகப்பெயர்ச்சி**

ஒவ்வொரு வருடமும் கிரகங்கள் ராசி மாறும். இது பொதுவான எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது.

சனி பெயர்ச்சி – வாழ்க்கையில் பெரிய மாற்றம்.

குரு பெயர்ச்சி – அதிர்ஷ்டம், வளர்ச்சி.

ராகு-கேது பெயர்ச்சி – எதிர்பாராத சம்பவங்கள்.

இதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் நன்மை / துன்பம் மாறிக்கொண்டே இருக்கும்.

**6. வாழ்க்கை துறைகள் எதிர்கால பார்வை**

(a) **கல்வி**

ஜாதகத்தில் 4ம் பாவம், 5ம் பாவம், புதன், குரு முக்கியம்.

நல்ல கிரக நிலை இருந்தால் உயர் கல்வி, வெளிநாட்டு படிப்பு சாத்தியம்.

புதன் பலமாக இருந்தால் அறிவு, புத்திசாலித்தனம் வளர்ச்சி பெறும்.

(b) **தொழில்**

10ம் பாவம், சனி, செவ்வாய், சூரியன் தொழிலை நிர்ணயிக்கின்றன.

சனி நல்ல நிலையில் இருந்தால் உழைப்பின் மூலம் உயர்வு.

செவ்வாய் பலமாக இருந்தால் அரசு வேலை அல்லது இராணுவம்.

குரு தொழில் பாவத்தில் இருந்தால் ஆசான், வழக்கறிஞர், வணிகர்.

(c) **திருமணம்**

7ம் பாவம், சுக்கிரன், குரு திருமணத்தை நிர்ணயிக்கின்றன.

நல்ல கிரக நிலை இருந்தால் மகிழ்ச்சியான திருமணம்.

கேடு ஏற்பட்டால் தாமதம் அல்லது பிரச்சினை.

(d) **ஆரோக்கியம்**

1ம் பாவம், 6ம் பாவம், 8ம் பாவம் ஆரோக்கியத்தைக் காட்டும்.

சனி, ராகு, கேது பலவீனமாக இருந்தால் நோய்கள் வரும்.

சூரியன், செவ்வாய் பலமாக இருந்தால் நல்ல ஆரோக்கியம்.

(e) **பணம் & செல்வம்**

2ம் பாவம், 11ம் பாவம், சுக்கிரன், குரு முக்கியம்.

குரு நல்ல நிலையில் இருந்தால் அதிக வருமானம்.

சனி இருந்தால் கடின உழைப்பின் மூலம் செல்வம் கிடைக்கும்.

(f) **ஆன்மிகம்**

9ம் பாவம், 12ம் பாவம், குரு, கேது ஆன்மிகத்தை

குறிக்கும்.

கேது பலமாக இருந்தால் ஆன்மிகம், யோகம்.

குரு ஆசீர்வாதமாக இருந்தால் தெய்வீக அனுபவம்.

**7. சனி எதிர்காலத்தின் சோதனை**

சனி என்ற கிரகம் வாழ்க்கையில் முக்கியமான பாடங்களை கற்றுத்தருகிறது.

சனி சடேசாதி, அஷ்டம சனி காலங்களில் சோதனை அதிகம்.

ஆனால் அவை ஒருவரின் மனதை பலமாக்கி, எதிர்காலத்தை சீர்படுத்தும்.

**8. ராகு கேது எதிர்பாராத மாற்றங்கள்**

ராகு இருக்கும் இடத்தில் ஆசைகள், புதுமை, வெளிநாட்டு வாய்ப்புகள்.

கேது இருக்கும் இடத்தில் பற்றின்மை, ஆன்மிகம்.

இவை இரண்டும் எதிர்காலத்தில் திடீர் சம்பவங்களுக்கு காரணமாகின்றன.

**9. ஜாதகமும் சுய முயற்சியும்**

ஜாதகம் வழிகாட்டும் கருவி மட்டுமே.

கிரகங்கள் “சூழ்நிலைகளை” கொடுக்கும்.

ஆனால் முயற்சி, உழைப்பு, முடிவு என்பவை நம்மிடம் தான் இருக்கின்றன.

எதிர்காலம் முற்றிலும் ஜாதகத்தில் மட்டும் இல்லை; அது நம்முடைய செயல்களில் அதிகம் இருக்கிறது.

**10. முடிவு**

ஜாதகத்தின் அடிப்படையில் எதிர்காலத்தைப் பார்க்கும் போது:

பாவங்கள், கிரகங்கள், தசா, கோச்சாரம் ஆகியவை முக்கியம்.

வாழ்க்கையின் ஒவ்வொரு துறைக்கும் தனித்தனி விளக்கங்கள் இருக்கின்றன.

நல்ல கிரகங்கள் இருந்தால் விரைவான முன்னேற்றம்; சவாலான கிரகங்கள் இருந்தால் தாமதம், சோதனை.

**ஆனால் மிக முக்கியமாக:**

“ஜாதகம் உங்களுக்கு பாதையை காட்டும் வரைபடம். ஆனால் அந்த பாதையில் நீங்கள் எவ்வளவு தொலைவு செல்வீர்கள் என்பதை உங்கள் உழைப்பும் மனவலிமையும் தான் தீர்மானிக்கும்.”


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | **₹ 240/-** |

Administrative Office:

**PENA KURAL**

**3/885, Pillaiyar Kovil Street, (Opp to Perumal Temple) Mettukuppam, OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**

**Ph: 044-35906002, 87545 82123**

**Email: info@penakural.com, Web: www.penakural.com**

# இந்தியாவில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பயன்பாடு அச்சத்தில் பொது மக்கள்!

அண்மைக்காலமாக கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் புழக்கம், கடத்தல் அதிகரித்திருப்பதாக பல்வேறு தரப்பிலிருந்தும் தொடர்ந்து புகார் கூறப்பட்டு வருகிறது. அதை மெய்ப்பிக்கும் வகையில் நாடு முழுவதும் ஆங்காங்கே தொடர்ந்து போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்படுவது குறித்து அன்றாடம் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

இருப்பினும் போதைப் பொருள்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், போதைப் பொருள்கள் விற்பனையைக் கண்காணித்து பறிமுதல் செய்யவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ஒன்றிய, மாநில அரசுகள் தெரிவித்து வருகின்றன. இந்தச் சூழலில், சென்னை சூளைமேடு பகுதியில் உயர்ரக மெத்தம்பெட்டமைன் போதைப் பொருள் விற்றதாக, பொறியாளர்கள் 4 பேர் அண்மையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலை கிடைக்காததால் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக போலீஸ் விசாரணையில் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் .

இதேபோல், சென்னை பகுதியில் உள்ள ஒரு பொறியியல் கல்லூரி விடுதியில் சில மாதங்களுக்கு முன்பு போலீஸார் நடத்திய திடீர் சோதனையில் பெருமளவில் போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களில் சிலர், போதைப் பொருள்களைப் பதுக்கிவைத்து மாணவர்களுக்கும் வெளிநபர்களுக்கும் விற்றதாக விசாரணையில் தெரியவந்தது. எனவே இவை சட்ட விரோதம் எனத் தெரிந்திருந்தும் பொறியாளர்களும், மாணவர்களும் இந்தச் செயலில் ஈடுபட்டதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.



வேலை கிடைக்காததால் போதைப் பொருள்களை விற்பனை செய்தோம் என்று பொறியாளர்கள் கூறுவதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது ஏனெனில் குறுகிய காலத்தில் அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கமாக இருந்திருக்க முடியும்.

இருப்பினும் பொறியியல் கல்வியைப் பொருத்தவரை, இந்தியாவில் ஆண்டுதோறும் 15 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பொறியியல் படிப்பு முடித்து வெளிவருவதாக அரசின் தரவுகள் தெரிவிக்கின்றன. அவர்களில் திறன் அடிப்படையில் 10 % பேர் மட்டுமே உரிய வேலைவாய்ப்பு பெறுவதாகவும் அந்தத்தரவுகள் குறிப்பிடுகின்றன. பலர் தொடர்ந்து வேலை தேடுபவர்களாகவே இருந்து வருகின்றனர், எனவே ஏதாவது ஒரு வழியில் பணம் சம்பாதிக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகும் அத்தகையவர்களுக்குத் தூண்டில் போடுகிறது போதைப் பொருள் கடத்தல் கும்பல்.

மேலும் வேலை தேடுபவர்களைக் கண்டறிந்து

**வேலை தேடுபவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு பணத்தாசை காட்டும் போதைப் பொருள் கடத்தல் கும்பல், அவர்களை மூளைச் சலவை செய்து, தங்கள் வலையில் சிக்க வைக்கிறது எனவே இப்பிரச்னைக்குத் தீர்வு காண, புதிய தொழில்முனைவோரை ஊக்குவித்தல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல், கல்வி முறையில் தொழில்நுட்பப் பயிற்சிகளை மேம்படுத்துதல் தற்பொழுது மிகவும் அவசியம்.** ”

அவர்களுக்கு பணத்தாசை காட்டும் போதைப் பொருள் கடத்தல் கும்பல், அவர்களை மூளைச்சலவை செய்து, தங்கள் வலையில் சிக்கவைக்கிறது. அவ்வாறு சிக்குபவர்கள் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களை வாங்கி விற்கத் தொடங்குகிறார்கள்.

எனவே பெருகிவரும் மக்கள்தொகை, தொழில்நுட்ப மாற்றங்கள், திறமையின்மை, வேலை தேடும் செயல்முறையில் உள்ள சில தடங்கல்கள் போன்றவை வேலையின்மைக்கு முக்கியக் காரணங்களாக கூறப்படுகின்றன. இப்பிரச்னைக்குத் தீர்வு காண, புதிய தொழில்முனைவோரை ஊக்குவித்தல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்குதல், கல்வி முறையில் தொழில்நுட்பப் பயிற்சிகளை மேம்படுத்துதல், விவசாயம் அல்லாத துறைகளில் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது போன்றவை அவசியம் என வல்லுநர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இருப்பினும் அரசு பல்வேறு துறைகளிலும் வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில் திட்டங்களை வகுத்து மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்தி வருகின்றன அதன் அடிப்படையில், பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் திறன்சார்ந்த பாடத்திட்டத்தை கொண்டுவரும் வகையில், அதை தேசிய கல்விக் கொள்கையில் சேர்க்க அரசு பரிசீலித்து வருவதாக ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரி-வித்துள்ளார்.

அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியை வேகப்படுத்தி, வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை அடையும் முனைப்புடன் ஒன்றிய அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது, தமிழகத்தைப் பொருத்தவரை, கடந்த 2024–25ஆம் ஆண்டில் மட்டும் மாநிலத்தில் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்கள் வாயிலாக சுமார் 7 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதாக புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன், மாநிலத்தில் தொழில் வளத்தைப் பெருக்கும் வகையில், பல்வேறு நிறுவனங்கள் தொழில் தொடங்க தொடர்ந்து அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

இதனால், பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழலை அரசு உருவாக்கி வருகிறது. மேலும் படிப்புக்கேற்ற வேலை கிடைக்கவில்லை என்று உயர் கல்வி கற்றவர்கள் காலம் கடத்திக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை ஆகவே வேலைக்கான போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில், கூடுதல் தகுதி, திறமைகளை வளர்த்துக்கொள்ள முன்வர வேண்டும்.

மேலும் இளைஞர்கள் சுயதொழில் செய்வது குறித்தும்சிந்திக்க வேண்டும். ஒரு புறம் இருக்க போதைப் பொருள்களின் பயன்பாடு என்பது கல்லூரி அளவில் மட்டுமல்லாமல், பள்ளி மாணவர்கள் இடையேயும் அதிவேகமாக பரவி வருவது கவலையை ஏற்படுத்துகிறது. தமிழகத்திலும் கேரளத்திலும் போதைப் பொருள்கள் பயன்பாடு அண்மைக்காலமாக அதிகரித்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சமூக அளவிலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம்தான் இந்தப்பிரச்னையை எதிர்கொள்ள முடியும்.

மேலும் கேரள அரசின் கல்வித் துறையும் சுகாதாரத் துறையும் போதைப் பொருள்களின் பயன்பாடு அதிகரித்திருக்கிறது என்பதை அங்கீகரித்து விழிப்புணர்வு பிரசாரம் நடத்தி வருகின்றன. மலையாள ஊடகங்களும் ஒன்றிணைந்து அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றன. தமிழ்நாடும் உன்னிப்புடன் களமிறங்க தருணம் இது என்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்

# PROPSERV
Property Related Allied & Legal services

- ★ REGISTRATION
- ★ PATTA
- ★ GIRAMA NATHAM
- ★ CMDA APPROVAL
- ★ BUILDING PLAN
- ★ NAME TRANSFER
- ★ SETTLEMENT
- ★ LEGAL HEIR CERTIFICATE
- ★ CORPORATION TAXES
- ★ LAND CEILING
- ★ SLUM BOARD
- ★ HOUSING BOARD
- ★ PROPERTY IDENTIFICATION
- ★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106. Cell: 97896 98297
Email: advgsathiyanarayanan@gmail.com

9444010700 | 8668141500
rameshkumar7hills@gmail.com

**Er.K Ramesh kumar**
CMDA & Chennai Corporation Approved
Registered Engr / Consultant



| Owned, Printed and Published by: **NV SIVASHANKAR** | Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.** | Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.** | Editor: **RATHIKA S** |
|---|---|---|---|

# TAMILNI PRINTZ & GRAPHICS

**ALL TYPE OF PRINTING & GRAPHICS SOLUTIONS**

DTP தமிழ் / ENGLISH | PRINTOUT | LAMINATION

DESIGN: NEWSPAPER | MAGAZINE | BILL BOOKS
LETTERPAD | LOGO | FLEX / VINYL | POSTER



## WEBSITE DESIGN SERVICE



APPLY
PAN CARD
PASSPORT

ALL ONLINE SERVICE



DESIGN
MAGAZINE
NEWSPAPER

ADDRESS: 3/885, PILLAIYAR KOVIL STREET, METTUKUPPAM, OMR,
CHENNAI - 600097, EMAIL: rsprintzy@gmail.com

PH.: 044-3590 6002 MOB.: 8754582123 / 9962245338

**PENA KURAL,** Tamil Monthly - October 2025
Registered with the Registrar of Newspapers for India Under No.: **TNTAM/2022/85375**

Administrative Office:
**3/885, Pillaiyar Kovil Street, (Opp to Perumal Temple) Mettukuppam, OMR, Chennai - 600097.**
Contact No.: **044 - 35906002, 87545 82123** Email: **info@penakural.com**

